மக்களின் பத்து

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 14 சனிக்கிழமை (30-9-2000) தொ பேசி;- 3378 ஒலி: 285

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## தென்மராட்சியில் இருந்து வெளியேறுமாறு மக்களிடம் புலிகள் அவசர வேண்டுகோள்!

யாழ் குடாவின் தென்மராட்சிப் பகுதியில் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்ட ''ஓயாத அலைகள் 4'' இராணுவ நடவடிக்கையை அடுத்து அப்பகுதி மக்களைப் பாதுகாப்புக் கருதி வடமராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்லுமாறு புலிகள் அவசரமாக அறிவித்துள்ளனர். தென்மராட்சியில் கொடிகாமம், கச்சாய், வரணி, மிருசுவில், மந்துவில் போன்ற பகுதிகளில் வாழும் மக்களையே இவ்வாறு இடம் பெயர்ந்து செல்லுமாறு புலிகள் அறிவித்துள்ளனர். புலிகளின் இவ்வறிவித்தலை அடுத்து பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் உட்பட பெருந்தொகையான மக்கள் அலை அலையாக வாகனங்கள், மாட்டு வண்டில்கள், சைக்கிள்கள் மற்றும் பொடி நடையாகவும் வரணிப் பாதையூடாக வடமராட்சி நோக்கி வந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதே வேளை இடம் பெயர்ந்து வரும் மக்களை வரணிப்பகுதியில் வைத்து தடுத்து நிறுத்தப்படுவதாகவும்இதனால் பெருந்தொகையான மக்கள் அங்கிருந்து வரமுடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் மேலும் தெரியவருகிறது. (ந-4)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்று வரும் ஓயாத அலைகள் — 4 நடவடிக்கையின் போது

- குயிலன் (சிவக்கொழுந்து தயாளன்) யாழ்ப்பாணம்
- வீரப்பன் (மாரிமுத்து குமரேசன்) கிளிநொச்சி
- தமிழ்ச்செல்வன் (பசுபதி ரமேஸ்வரன்) கிளிநொச்சி

10 ஆம் பக்கம் பார்க்க

## நான்காவது நாளாக தொடரும் ஓயாத அலை - 4

# தென்மராட்சி பகுதியில் எந்நேரமும் பாரிய யுத்தம் வெடிக்கும் அபாயம்!

### மக்கள் வெளியேற முண்டியடிப்பு!

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் இராணுவத்தினருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலைகள் 4 நான்காவது நாளாக நேற்று உக்கிரமான முறையில் இரு தரப்பினரும் மிகவும் நெருக்கமாக நின்று போரிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சண்டையின் போது பல்குழல் பீரங்கிகளோ விமானக் குண்டு வீச்சுக்களோ அதிகம் இடம் பெறவில்லை. இராணுவமும், புலிகளும் மோதிவரும் அதேவேளை புலிகள் நாகர் கோவில் எழுதுமட்டுவான் பகுதிகளில் பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தென்மராட்சிப் பகுதிகள் குண்டுத் தாக்குதல்களினால் அதிர்ந்த வண்ணம் இருந்தன.

ஓயாத அலைகள் 3 - இன் மூலம் ஆனையிறவுப் படைத் தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஐந்து மாதங்களுக்குள் தென்மராட்சிப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக ஓயாத அலைகள் 4 ஐ ஆரம்பித்து நான்காவது நாளான நேற்று புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருவதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்க

10 ஆம் பக்கம் பார்க்க

### வரணியில் இராணுவம் குவிப்பு

தென்மராட்சி வரணிப்பகுதியில் இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் குவிக்கப்படுவதுடன் பெருமளவு இராணுவ தளபாடங்களும் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கிளாலிப் பகுதியில் இருந்து பின்வாங்கிய இராணுவத்தினர் உசன், மிருசுவில், கச்சாய், கொடிகாமப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ★ வடமராட்சிப் பகுதியில் பொது மக்கள் உதவியுடன் காவலரண் அமைக்கும் படையினர்!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலை ஒட்டி வடமராட்சிப் பகுதியில் பல புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டுவரு... வீதியில் இந்த காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகிறது இக்காவலரண் அமைக்கும் பணியில் இராணுவத்தினரால் பொதுமக்கள் ஈடுபட்டு...

ஓயாத அலைகள் 3 - இன் மூலம் ஆனையிறவுப் படைத் தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஐந்து மாதங் களுக்குள் தென்மராட்சிப் பகுதியை தமது கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவருவதற் காக ஓயாத அலைகள் 4 ஐ ஆரம்பித்து நான்காவது நாளான நேற்று புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே கடுமையான சண்டை நடை பெற்றுவருவதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்

10 ஆம் பக்கம் பார்க்க

# ஒக்ரோபர் 10-ற்குள் ஆனையிறவு கைப்பற்றப்படுவது சாத்தியமாகாது!

## ஜெனரல் அசோக் மேத்தா கருத்து

(புதுடில்லி)

எதிர் வரும் பொதுத் தேர் தலுக்கு முன்னர் யாழ்ப்பா ணத்திற்கு ஆனையிறவு ஊடான தரைவழிப்பாதை யைத் திறப்பதென்பது சாத் தியமற்ற ஒரு விடயம் என்று இந்திய அமைதிப்படையின் பிராந்தியத் தளபதியாக இருந்த ஜெனரல் அசோக் மேத்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அசோக் மேத்தா மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது;

ஒக்ரோபர் 10 ஆம் திகதிக் குள் ஆனையிறவுப்படைத்தளத்தை மீண்டும்கைப்பற்ற முடியுமெனபிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தேர்தல் பிரசாரத்தின் போது தெரி வித்துள்ளார். ஆனால் இந்தக் கால எல்லைக்குள் ஆனையிற வுத் தளம் மீட்கப்படும் என் பது சாத்தியமாகாது என்று

10ஆம்பக்கம் பார்க்க

## வல்லைக் கடலில் மீட்கப்படாத இராணுவ 'ட்ரக்' வண்டி

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்தடியில் தடம் புரண்ட இராணுவ 'ட்ரக்' வண்டி இன்னமும் மீட்கப்படாத நிலையில் கட லில் இடப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை வடம ராட்சி கிழக்குபகுதிக்குராணு வத்தளபாடங்களை ஏற்றிச் சென்றபோதே இவ் விபத்து

10 ஆம் பக்கம் பார்க்க

## தபால்மூலம் வாக்களிப்பு!

(வவுனியா)

வன்னி மாவட்டபொதுத் தேர்தல் தபால் மூல வாக்க ளிப்பு மிகவும் சுறுசுறுப்பாக வவுனியா, மன்னார் மாவட் டங்களில் எதுவித அசம்பாவி தங்களுமின்றி இடம்பெற்ற தாக வவுனியா தெரிவத் தாட்சி அதிகாரி கே.கணேஸ்

10ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தேர்தல் சம்பந்தமானமகா நாடு ஒன்றில் கலந்து கொள் வதற்காகஇன்று சனிக்கிழமை கொழும்பு செல்கிறார். (4)

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர் தலை ஒட்டி வடமராட்சிப் பகுதியில் பல புதிய காவல ரண்கள் அமைக்கப்பட்டுவரு வதாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை பிரதான வீதியில் இந்த காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகிறது இக்காவலரண் அமைக்கும் பணியில் இராணுவத்தின ரால் பொதுமக்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகி றது. (வ)

## 5 ஆம் தர புலமைப் பரிசில்பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

(கொழும்பு))

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடி வுகள் இன்று வெளியிடப்படு கிறது. எதிர் வரும் திங்கட் கிழமை இப் பரீட்சைப் பெறு பேறுகள் சகல பாடசாலை களுக்கும் அனுப்பிவைக்கப் படும் என்று பரீட்சை ஆணை யாளர் நாயகம் ஏ. எம் ஆர். டி. அமரக்கோன் தெரிவித் துள்ளார்.

10 ஆம் பக்கம் பார்க்க

## தபால் ஊழியர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பாம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர் தலை முன்னிட்டு வாக்காளர் அட்டைகளை விநியோகிக் கும் தபால் ஊழியர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங் கப்படவிருப்பதாக பொலிஸ்

.10 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலுக்கு முதல் நாளே பணியாற்றும் இடம் தெரிவிக்கப்படும்

(கொழும்பு)

தேர்தல் பணிகளில் ஈடுபட வுள்ள உத்தியோகத்தர் களுக்கு அவர் எங்கு கடமை யாற்ற வேண்டுமென்ற தக வல் தேர்தலுக்கு முதல் நாளே அறிவிக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரி வித்துள்ளார்.

10 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ

## சிறு விளம்பரம்

சீமெந்துக் கூரை ஓடுகள் விற்பனைக்கு

ஜீ.ரி.சற், அரச சார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும் வீட்டுத்திட்டங்கள் பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக் கூரை ஓடுகள் முக்ட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையும், விற்பனை நிலையமும் லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை இணுவில். (1772)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 26-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ்: குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகிறது

### சங்கானை

| | |
|---|---|
| 125447 ஏ | 125447 பி |
| 125447 சி | 143817 ஏ |
| 153466 ஏ | 153466 பி |
| 155208 ஏ | 155411 ஏ |
| 157694 ஏ | 157694 பி |
| 157694 சி | 157694 டி |
| 157867 ஏ | 157867 பி |
| 157867 சி | 157867 டி |
| 158599 ஏ | 158630 ஏ |
| 158686 ஏ | 158686 பி |
| 158686 சி | 160587 ஏ |
| 160603 ஏ | 160648 ஏ |
| 160687 ஏ | 160688 ஏ |
| 160688 பி | 160708 ஏ |
| 160708 பி | 160708 சி |
| 160844 ஏ | 160844 பி |
| 160844 சி | 160893 ஏ |
| 160893 பி | 160893 சி |
| 160917 ஏ | 161503 ஏ |
| 161555 ஏ | 161555 பி |
| 161569 ஏ | 161584 ஏ |
| 161584 பி | 161584 சி |
| 161584 டி | 161584 ஈ |
| 171584 எவ் | 161584 ஜி |
| 161785 ஏ | 161798 ஏ |
| 161902 ஏ | 161926 ஏ |
| 161973 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 140679 ஏ | 140679 பி |
| 140679 சி | 140678 டி |
| 140679 ஈ | 144267 ஏ |
| 144267 பி | 144267 சி |
| 144571 ஏ | 144571 பி |
| 144571 சி | 144639 ஏ |
| 149933 ஏ | 149933 பி |
| 149933 சி | 149933 டி |
| 149933 ஈ | 149933 எவ் |
| 150041 ஏ | 150041 பி |
| 150041 சி | 150041 டி |
| 150135 ஏ | 150132 பி |
| 150148 ஏ | 150148 பி |
| 150148 சி | 150158 ஏ |
| 150158 பி | 150166 ஏ |
| 150166 பி | 150166 சி |
| 152722 ஏ | 152722 பி |
| 152810 ஏ | 152810 பி |
| 152810 சி | 153018 ஏ |
| 153018 பி | 154054 ஏ |
| 154238 ஏ | 156232 ஏ |
| 156295 ஏ | 156368 ஏ |
| 156368 பி | 156408 ஏ |
| 156408 பி | 156419 ஏ |
| 156419 பி | 156419 சி |
| 156443 ஏ | 156443 பி |
| 156522 ஏ | 156555 ஏ |
| 156555 பி | 156601 ஏ |
| 156637 ஏ | 156637 பி |
| 156637 சி | 158294 ஏ |
| 159013 ஏ | 159100 ஏ |
| 159148 ஏ | 159148 பி |
| 159148 ஏ | 159209 ஏ |
| 159209 பி | 159443 ஏ |
| 159443 பி | 160943 ஏ |
| 160943 பி | 161157 ஏ |
| 161157 பி | 161157 சி |
| 161187 ஏ | 161187 பி |
| 161187 சி | 161187 டி |
| 161213 ஏ | 161213 பி |
| 161213 சி | 161213 டி |
| 161213 ஈ | 161235 ஏ |
| 161235 பி | 161235 சி |
| 161265 ஏ | 161265 பி |
| 161265 சி | 161298 ஏ |

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

கடந்த 27 ஆம் திகதி கிளாலிப் பகுதியில் படையினருடன் ஏற்பட்டமோதலின் போது,

- முகுந்தன்/கோவைநாதன் (காந்தசாமி யுவராஜ்) கிளிநொச்சி
- கடல்மாறன் (கொலிஸ்ரன் டியோனி) முல்லைத்தீவு
- இசைவிழி (சின்னத்துரை தயாநிதி) யாழ்ப்பாணம்
- தன்னிகர்ச்செல்வி (மாரிமுத்து கிருஸ்ணவேணி) கொழும்பு

என்ற போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி சாவகச்சேரி பகுதியில் படையினருடனான மோதலில்

- அன்புமதி (இராமசாமி விஜயலட்சுமி) முல்லைத்தீவு
- சதிவினி (தேவராஜா சுஜிதா) யாழ்ப்பாணம்
- இளவரசி (கறுப்பையா பத்மலதா தேவி) கிளிநொச்சி
- கானகா (இராசரட்ணம் கவிதா) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகளும் முல்லைத்தீவுப் பகுதியில் சுகயீனம் காரணமாக

- குயில்/மலர்க்கொடி (செல்லப்பா சுபேதினி) முள்ளியவளை

எல்லைப்படை வீரர்களான

- பெரியவன் (சுப்பிரமணியம் சதீஸ்) பூநகரி
- மோகன் (கந்தசாமி மோகனராஜ்) பூநகரி
- விஸ்வநாதன் சதீஸ்குமார் யாழ்ப்பாணம் தவராசா ரமேஸ்கண்ணன் இயக்கச்சி

துணைப்படை வீரரான

- மாரியம்மன் ரமணன் யாழ்ப்பாணம்

ஆகியோரும் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.


ஸ்ரீ செல்வா

(யாழ்ப்பாணம்)

பிரபு, ரம்யாகிருஷ்ணன் நடித்த 'பட்ஜட் பத்மநாபன்'

10.30- பழையநேரம்

2.00 மணிக்கு (ப.நே)

அர்ஜூன் - மீனா நடித்த

ரிதம்

புதிய வெளியீடு


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07-12-1949

இறப்பு 12-10-1999

திருமதி

**சாந்தநாயகி பீதாம்பரம்**

ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்-இம்
மண்ணில் அழுது புரண்டாலும்
மாறிடுமோ எம் துயரம் அம்
மம்மா விடம் சென்றாயோ
அவர் அணைப்பில் துயில்வாயோ
மாண்ட நீ வருவாயோ
மாறாத எம் துயர் தீர்க்க

கணவன், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்

04, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(1777)


இலவச சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும்.

New Lant Clinic

(நியூலான்ட் கிளினிக்)

மெடிலான் ஆங்கில மருந்து நிறுவனம் அருகில்

பிரதான வீதி, சங்கானை.

10-9-2000 முதல் 10-10-2000 வரை

M. B. B. S. டாக்டர்களினால் தினமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை இலவச சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும் பெற்றுக் கொள்ளலாம்

[கி/778]





சுபத்திரன் (றொபேட்)

X

மானிட விடியலுக்காகவும்

மகத்தான சமாதானத்திற்காகவும் வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக்குழு - 2 | X



அ. வரதராஜப் பெருமாள்

X

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

(ஈ. பி. ஆர். எல்.எஃப்)





பாராளுமன்றத் தேர்தல் யாழ்.மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட,

தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

தமிழர் விடுதலைக் கூட்டணி | X

(8-818)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

### அமைச்சர் பதவி வழங்காமல்

## இழுத்தடிப்பு செய்வதன்பலனை அரசாங்கம் அனுபவித்தே தீரவேண்டும்

(கொழும்பு)

அமைச்சர் பதவி வழங்காமல், காலம் கடத்துவதன் விளை வினைப் பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்கொள்ள வேண்டி இருக்கும்

இவ்வாறு, முஸ்லிம் கொங்கிரஸ் இணைத்தலைவர் ரவூப் ஹக்கிம் கடந்த புதனன்றுகொழும்புப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப் ஹெலி விபத்தில் மரணமடைந்த பின்னர் ரவூப் ஹக்கிமிற்கு அப்பதவி வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைத் தொடர்ந்தும் இழுத்தடித்துச் செல்வது குறித்தே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்பதவியை தமக்கு வழங்குவது தொடர்பில் உகந்த முடிவு எடுப்பதற்கு உரிய கால அவகாசம் ஜனாதிபதிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் கொடுத்திருந்த போதிலும் இவ் விடயத்தில் காலம் கடத்தும் போக்கில் அரசு நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேசமயம், கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி அமச்சர் பதவி வழங்கப்படுவதாக முன்பு அறிவித்த போதிலும் சட்டப்பிரச்சினையைக் காட்டி திங்கள் வரை பிற்போடப்பட்டதும், ஜனாதிபதியிடமிருந்து சாதகமான முடிவு எதுவும் இதுவரை அறிவிக்கப்படாததும் தெரிந்ததே. (உ)

## தொடரும் மழையினால் இடம்பெயர்ந்தோர் அவலம்

(இணுவில்)

தென்மராட்சி, மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்தும் அண்மையில் ஏற்பட்டயுத்தத்தினால் இடம்பெயர்ந்து சங்குவேலி மற்றும் கந்தரோடைப்பகுதியிலுள்ள முகாங்களிலுள்ள மக்கள்தொடரும் மழையினால் பெரும் அவலங்களை எதிர் நோக்குகின்றனர்.

இவர்களின் குடியிருப்புகள் எல்லாம் மழைநீர் தேங்கி நிற்கின்றது; இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

இதனாலிவர்கள்தொடர்ந்தும் இக்குடிகளில் வாழ்வது சாத்தியமற்றதாகவுள்ளது.

தொடர்ந்தும் மழைபெய்தால் அப்பகுதியிலுள்ள பாடசாலைகளிலே இம்மக்கள் தஞ்சமடையவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் அடிப்படைத் தேவைகள் பலவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களிடையேவிறகுத்தட்டுபாடும் நிலவுகின்றமையால் பற்றையிலுள்ள சுள்ளித்தடிகளை தேடி அலைகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-49)

## 15 வயது மாணவி மீது பாலியல் வல்லுறவு குடும்பஸ்தர் றிமாண்டில்

(புலோலி)

15வயது பாடசாலை மாணவி மீது பாலியல் வல்லுறவு புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் நாலுபிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரொருவரை றிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை சக்கோட்டையில் நடைபெற்ற இப்பாலியல் வல்லுறவு சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிஸார் நாலுபிள்ளைகளின் தந்தையான எஸ். சுரேஸ்குமார் என்பவரைக் கைதுசெய்து பருத்தித்துறைபொலிஸார் சந்தேகநபரை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ்.ஏ. ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்,

நீதிபதி சந்தேகநபரை எதிர் வரும் 2 ஆம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாதிக்கப்பட்ட மாணவி மேலதிக சிகிச்சைக்காகயாழ் போதனாவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (க-52)

## தேர்தலில் வாக்களிக்கும்போது அடையாள அட்டையை பரிசீலிக்குக

### தேர்தல்ஆணையாளரிடம் கோரிக்கை

யாழ் மாவட்டத்தில் நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டுமாயின் வாக்காளர்களின் அடையாள அட்டைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

இவ்வாறு சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் போட்டியிடும் வேல்முருகு தங்கராசா தலைமையிலான சுயேச்சைக் குழு தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கும் மகஜர்அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுயேச்சைக்குழுமுன்றின்வேட்பாளர் சி.சிவஞானம் தெரிவித்தார். [ந]

# புலிகள் படையினர் உக்கிரமோதல் இடையில் தவிக்கும் பொதுமக்கள்

## ஐ.நா. செயலருக்கு அவசரமகஜர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாதுகாப்பு படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மிடையில் இடம்பெற்று வருகின்ற யுத்தம் பொதுமக்களுக்கும் அவர்களதுசொத்துடைமைகளுக்கும் பல்வேறு விதமான கொடிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன; யுத்தத்தின் செயற்பாடுகள் பொது மக்களின் நாளாந்த கருமங்களை மிகவும் மோசமாக்கி வருகின்றன. நவீன யுத்த விமானங்களும் ஆட்லறி ஷெல் சத்தங்களும் எழுப்புகின்ற பேரிரைச்சல்கள்மக்களின் இதயங்களில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்திவருகின்றன. இத்தகைய தாக்கங்கள் பொதுமக்களை உளவியல் ரீதியாகப் பாதிப்படையும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணக்கிலுள்ள சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு. குடாநாட்டில் தொடர்கின்ற கொடிய யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும் எனும் தலைப்பில்நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர 'பக்ஸ்' செய்தியில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மக்கள் குழுவின் இணைச் செயலாளர்களான அருட் திரு.ஜே.பி.ஈ. செல்வராசாவும் எஸ்.பரமநாதனும் இணைந்து கையொப்பமிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதுவராயத்துக்கு ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

### யுத்த நிலை

யுத்தம் தொடர்பாக அரசாங்கத்தின் தற்போதைய கொள்கையாக சமாதானத்துக்கான யுத்தம் என்பது தெரியவந்துள்ளது. இதயசுத்தியுடனான பேச்சுவார்த்தையைத் தவிர வேறு எவ்வகையிலும் தொடர்கின்ற யுத்தத்துக்கு நல்லதோர் விடிவினை நிச்சயமாக ஏற்படுத்தமாட்டாது.

அத்துடன் தொடர்கின்ற யுத்தத்தினை நோக்குகின்றபோது இதனை இனியும் உள்நாட்டுப் போர் எனக் கூற முடியாதுள்ளது; இரு நாடுகளுக்கும்இடையில்மேற்கொள்ளப்படுகின்றயுத்தம்போலவே இது காணப்படுகின்றது. பாதுகாப்பற்ற நிலைஇங்கு பொதுமக்களால் நன்கு உணரப்பட்டு வருகின்றது. சர்வதேச மனிதாபிமானச்சட்டம்இங்கு அவதானிக்கப்படவில்லை.

### அரசினால் முடியாது

கடந்த ஆறு வருடங்களாக ஆட்சியில் இருந்து வருகின்ற இப்போதைய அரசினால் குடா நாட்டில் நடைபெற்று வருகின்ற யுத்தத்தினை நிறுத்தி, அமைதியையும்சகஜ நிலையையும் தோற்றுவிக்க முடியாமல் போய் விட்டது.

1972 லும் 1978 லும் ஆட்சியில் இருந்த அரசாங்க நாட்டின் அரசியலமைப்பினைமாற்றின ஆயினும் இந்நாட்டின் வாழ்கின்ற சிங்களம் பேசும் இனத்தைத் தவிர ஏனைய இனத்தவர்களின் அபிலாசைகள் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அதே போலவே 1995ம் ஆண்டிலும் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்பில் தமிழ் இனத்தவர்களுக்கான அதிகாரங்கள் உரிமைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த வகையில் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகள் மற்றும் அபிலாசைகள் நீதியுடனும் சமத்துவத்துடன் வழங்கப்படுமா என்பது சந்தேகமாகவேயுள்ளது.

எனவே இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் நல்வாழ்வினையும் நிரந்தர சமாதானத்தையும் தங்களின் மேலான கவனத்தில் கொண்டு தங்களின் திறமையும் புகழ்மிக்க அணுகுமுறையையும் பயன்படுத்தி அல்லது பிரயோகித்து இங்கு வாழ்கின்ற மக்கள் மத்தியில் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதற்கு இந்த நெருக்கடி மிக்க வேளையில் உதவுங்கள் என அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; (க-77)

## இடம்பெயர் கொடுப்பனவு 2000 சீராக வழங்கப்படுவதில்லை

### பொது மக்கள் விசனம்

(அரியாலை)

தென்மராட்சி மற்றும் நல்லூர், யாழ்ப்பாணம், போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தசெயலர்பிரிவிலுள்ள மக்களிற்கு. வழங்கப்படும் 2000 ரூபாய் கொடுப்பனவுகளை பெறுவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு தொகுதி மக்களுக்கும், அவர்கள் தற்போது தங்கியிருக்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக வங்கிகளின் மூலம்பணம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக இப்பகுதிமக்கள் கொட்டும் மழையிலும், கொடியவெய்யிலிலும்தினமும் கிராமஅலுவலரிடமும் பிரதேச செயலகங்களிற்கும் அலைந்துதிரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

ஆனால் கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்படுவதாக இல்லை குறிப்பிட்ட நிதி செயலகத்தில் இல்லையெனவும் சில அதிகாரிகள் கூறுகின்றார்களாம். (த-106)

## இளையோர் முதியோர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேசசிறுவர் தினம் மற்றும் முதியோர் வாரவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் நல்லூர் பிரதேசசெயலக உதவிச்செயலர் எஸ். வேன்முருகோன் பிள்ளை உட்பட மேற்படி பிரதேச சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். (உ-3)

## தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கு வெளிநாட்டார் பயிற்சி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்கும் உள்ளூர் கண்காணிப்பாளர்களுக்கு நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுயாதீன அமைப்புக்கள் பயிற்சியினை வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பயிற்சிகள் தேர்தலுக்கான சுதந்திர அமைப்பாளர்களுக்கு செய்துள்ளார்.

இத்தகைய பயிற்சித் திட்டங்களை புத்தளம் மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்காக வெளிநாட்டுக் கண்காணிப்புக்குழுவை 50 பேர் அளவில் பயன்படுத்தப்பட்டுவருவதாக தேர்தல்கண்காணிப்பு நிலையத்தின் இயக்குநர் திருமதி பாச்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார். (வ)

நடைமுறை சாத்தியமான வழிகளில்
அன்றாடப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணவும்
தொலை நோக்குச் சிந்தனையுடன்
அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணவும்
என்றும் எம்மை ஆதரித்திடுவீர்!

X

என்றும் உங்கள் இன்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)
(1774)



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2000

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்

# தேர்தல் விஞ்ஞாபனம்

**எமது அன்பிற்கினிய மக்களே!**

எமதுதேசத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள யுத்தத்தினால் உங்கள்இயல்பு வாழ்வுசிதற டிக்கப்பட்டு அகதிவாழ்வே வாழ்க்கையாகிவிட்டது. இச்சூழலில் எதிர்வரும் அக்டோபர் மாதம் 10ம் திகதி உங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பாரிய கடமை உங்கள்மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் நீண்டகால அரசியலுரிமைப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமானவழியில், கௌரவமான அரசியல்தீர்வினைத் துணிச்சலுடன் முன்வைத்து அதனை நிறைவேற்றுவதற்காக ஜனநாயக வழிமுறையில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ. பி. டி. பி) யினராகியநாம் வாதாடியும் போராடியும் வருகின்றோம்.

அதேவேளை, யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சூழ்நிலையில் மக்களாகிய உங்களுக்கு உருவாகிவரும் அன்றாடப் பிரச்சினைகளையும் பெருமளவில் தீர்த்துவருவதுடன் தொடரும்யுத்தச் சூழ்நிலைமையையும்மீறி யாழ். மண்ணின் அபிவிருத்திப் பணிகளிலும் பங்காற்றிவருவதை பெருமையுடன் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எமது மக்களுக்கான இந்தச் சேவைகளைத்தொடர்ந்தும் இன்னும் அதிகமாக, ஆற்ற ஈ. பி. டி. பி உறுதிபூண்டுள்ளது.

தொடரும் யுத்தச் சூழ்நிலையினால் அவலத்துக்குள்ளாகும் உங்களைவிட்டு ஓடிஒழித்துக்கொள்ளாது, மக்களோடு மக்களாக நின்று உங்களுக்கு தொடர்ந்துசேவையாற்ற அரசுடன் ஜனநாயக வழிமுறையில் வாதாடியும் போராடியும் வருவதுடன் எதிர்காலத்திலும் தமிழ் பேசும்மக்களுக்குரிய உரிமைகளைப்பெறவும், தமிழ்பேசும்மக்கள் அனுபவிக்கும் அன்றாடப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும், வல்லமையுள்ளவர்கள் ஈ. பி. டி. பியினரேஎன்பதை நீங்கள் அறிவீர்கள்.

உங்கள்எண்ணமே எங்கள்எண்ணம்! இவ்வகையில் உங்கள் உரிமைக்குக் குரலும் உறவுக்குக்கரமும் கொடுத்துவரும் ஈ. பி. டி. பியினரை உங்கள்வருங்காலப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யுங்கள்!


எனவே உங்கள்வாக்குகளை ஈ.பி.டி. பியின் வீணைச்சின்னத்திற்கு அளித்து எமதுகரங்களைப் பலப்படுத்துங்கள்!

உங்கள்வாக்குகள், யுத்தமற்ற நிம்மதியானவாழ்வுக்காக, கௌரவமான அரசியல்தீர்வை எட்டுவதற்காக!

உங்கள்வாக்குகள், அன்றாடப்பிரச்சினைகளைத் தீர்த்து இயல்புவாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக!

உங்கள்வாக்குகள், தமிழ்பேசும்மக்களின் புதியஅரசியற் தலைமைக்காக!

**வீணையே உங்கள் சின்னம்**



மக்கள் சேவையிலுள்ள

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**

செயலாளர் நாயகம் ஈ. பி. டி. பி.

குறிப்பு: இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல், சட்டம், ஒழுங்குவிடயம் ஈழமாநிலத்திற்கு [பொதுவானதாகவும், ஏனையவிடயங்கள் யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டத்திற்குரியதாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களுக்குரிய அரசியல், சட்டஒழுங்கு தவிர்ந்தஏனையவிடயங்கள் பிரத்தியேகமாக அந்தந்த மாவட்டங்களின்] தேர்தல் விஞ்ஞாபனங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## 1. அரசு, சட்டம், ஒழுங்கு

1. தமிழ் பேசும் மக்களுடைய அரசியற் பிரச்சினைக்கு தீர்வாக ஈ.பி.டி.பி யினால் முன்வைக்கப்பட்டுள்ள. ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் எக்காலத்திலும் பிரிக்கப்படாத ''ஈழமாநிலத்திற்கான'' விசேட அதிகாரங்களை உள்ளடக்கிய சுயாட்சியைக் கொண்ட ஒரு நிர்வாக அலகை எமது அரசியற் செயற்பாட்டின் மூலம் தொடர்ந்து தீவிரமாக முன்னெடுத்துப் பெற்றுக் கொள்ளல்.

2. ''ஈழமாநிலத்திற்கென'' பகிர்ந்தளிக்கப்படவுள்ள விசேட அதிகாரங்களை உள்ளடக்கிய விடயங்கள் வாயிலாக பின்வருவனவற்றை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

   i) ''ஈழமாநிலத்தில்'' உள்ள அரச காணிகளில் குடியேற்றங்களை ஏற்படுத்தித் தமிழ் பேசும் மக்களின் பொருளாதார வளங்கள் சுரண்டப்படுவதையும் இனவிகிதாசார சமநிலையை மாற்றியமைத்து எமது மக்களின் அரசியற் பலத்தை முறியடிக்கும் நடவடிக்கைகளையும் தடுத்திடுவதற்கான ஏற்பாடு செய்தல்.

   ii) (A) கல்வி, விவசாயம், மீன்பிடி, சுகாதாரம், நீர்ப்பாசனம், உள்ளகக் கட்டமைப்பு, அரசகாணி

   iii) அமைச்சுகளிலும் திணைக்களத் தலைமைக் காரியாலயங்களிலும் மற்றும் 12.5 வீதத்திற்கு மேலாக தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் இருக்கும் சகல அரச நிறுவனங்களிலும் உள்ள தேசிய ஆவணங்களை தமிழ் மொழியிலும் பேண நடவடிக்கை எடுக்கப்படும்.

   iv) சிங்கள மொழியிலான தேசிய கீதத்திற்குரிய அதே அந்தஸ்த்தை தமிழ் மொழியிலான தேசிய கீதத்திற்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

   v) இலங்கையர் சமுதாயம் பல்லின, பல்மொழி, பல்மத இயல்பினைக் கொண்டுள்ளது என்பதை தேசியக் கொடியில் பிரதிபலிக்க நடவடிக்கை எடுத்தல்.

   vi) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

   vii) சகல பிராந்தியங்களிலும் அமையவிருக்கும் பிராந்திய பொலிஸ் சேவையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

   viii) தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து பெரும்பான்மையாக வாழ்கின்ற வெளிநாடுகளில் அவர்களுடனான வர்த்தக உறவு மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கும்

ii) (A) கல்வி, விவசாயம், மீன்பிடி, சுகாதாரம், நீர்ப் பாசனம், உள்ளகக் கட்டமைப்பு, அரசகாணி வீடமைப்பு ஆகிய அதிகாரங்களை முழுமையாக ''ஈழமாநிலத்திற்கு'' உரியவையாக செயற்படுத்தல்.

(B) மின்சாரம், கைத்தொழில் ஆகியவை காலகட்டத்தில் ''ஈழமாநிலத்திற்குரிய'' அதிகாரங்களாக செயற் படுத்தல்.

iii) ''ஈழமாநிலத்தில்'' இஸ்லாமிய மக்களின் அரசியல் ஜனநாயக, கலாசார உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய வகையிலும் வளர்த்தெடுக்கக் கூடியவகையிலும் இஸ்லாமிய மக்களின் அகச் சுயாதிக்கத்தை உறுதிப்படுத்த விசேட ஏற்பாடு செய்தல்.

iv) பிராந்திய பொதுச் சேவையைச் சேர்ந்தவர்களுடைய நியமனம், பதவியுயர்வு. இடமாற்றம் போன்ற சகல விட யங்களுக்குமான அதிகாரம் கொண்ட பிராந்தியப் பொதுச் சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.

v) நேரடி வெளிநாட்டுக் கடன்கள், முதலீடுகள், நன்கொடை களை ''ஈழமாநில'' நிர்வாகம் நேரடியாகவே பேசிப் பெற்றுக்கொள்ள வழிசெய்தல்.

vi) ''ஈழமாநிலத்திற்'' குட்பட்ட சட்டம், ஒழுங்கு தொடர் பான சகல விடயங்களும் ''ஈழமாநிலத்தின்'' அதிகாரங் களுக்குட்பட்டவையாக இருக்க உறுதிசெய்தல்.

3. தமிழ் பேசும் மக்களுக்கு மத்திய அரசின் அதிகாரங்களில் பின் வரும் விடயங்களில் பங்குகொள்ள ஈ.பி.டி.பி நடவடிக்கை எடுக் கும்.

i) இலங்கையர் சமுதாயம் பல்லின, பல்மொழி, பல்மத இயல்பினைக் கொண்டுள்ளது என்பதை அரசியல் யாப் பின் மூலம் உறுதிப்படுத்தல்.

ii) இலங்கை முழுவதிலும் சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்குரிய சமத்துவத்தை அதன் பிரயோக நிலையில் உறுதிசெய்தல்.

viii) தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து பெரும்பான்மையாக வாழ்கின்ற வெளிநாடுகளில் அவர்களுடனான வர்த்தக உறவு மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கும் கலாசார நடவடிக்கைகளை பேணி வளர்க்கவும் அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் ஓர் பிரிவை ஏற்படுத்தி இப் பிரிவின் செயற்பாடுகளை ''ஈழமாநில'' நிர்வாகத்திற்கு உட்பட்ட தாக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

ix) இலங்கையைத் தாயகமாகக் கொண்ட குடியுரிமை மறுக் கப்பட்ட இந்திய வம்சாவழியினர் குடியுரிமை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

x) துணை ஜனாதிபதிகள் (ஜனாதிபதி சிங்கள இனத்தைச் சார்ந்தவராயின்) தமிழ், முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர் களாக இருப்பதோடு அவர்களது தெரிவு அவ்வவ் இனப் பிரதிநிதிகளின் அங்கீகாரத்துடன் தெரிவுசெய்யப்படு வதை உறுதிப்படுத்தல்.

xi) தமிழ் பேசும் மக்களின் இனவிகிதாசாரத்தின் அடிப்படை யில் பாராளுமன்றப் பிரதி நிதித்துவத்தை பேணுவதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

xii) முப்படைகளிலும் இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் பங்கு அமைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

xiii) தமிழ் பேசும் மக்களின் இனவிகிதாசாரத்தின் அடிப்படை யில் மத்திய அரசின் மந்திரி சபை அமைவதற்கான ஏற் பாடுகளைச் செய்தல்.

xiv) மத்திய அரசாங்க சேவையின் ஒவ்வொரு துறையிலும் இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் ஊழியர்கள் சேவை யில் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் நியமனங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

xv) உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங் களுக்குரிய பதவிகளை இனவிகிதாசாரத்தின் அடிப்படை யில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**வீணையேஉங்கள் சின்னம்! சேவையே எங்களெண்ணம்!**

# தேர்தல் விஞ்ஞாபனம்....

4. யுத்தத்துக்கு முடிவுகாண புலிகளும் அரசும் பேச்சுவார்த்தையில் ஈடுபட தேசிய ரீதியிலும் இந்தியா, நோர்வே உட்பட சர்வதேச ரீதியிலும் அழுத்தம் உருவாக்கவும் தலையிடவும் ஈ.பி.டி.பி. முழுமூச்சுடன் செயற்படும்.

5. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதும் தீர்க்கமானதுமான தீர்வு ஒன்றை முன்வைக்கும் அல்லது ஆதரிக்கும் தென்னிலங்கைக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதுடன் எக்காலத்திலும் பிரிக்கப்படாத வடக்கு - கிழக்கு ''ஈழமாநிலத்தில்'' வாழும் அனைத்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளும் உடனடித் தீர்வு காண்பதிலும் ஈ. பி. டி. பி முன்னின்று உழைக்கும்.

6. தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன் வருகின்ற சக தமிழ், முஸ்லிம் அரசியற் கட்சிகளுடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆலோசனைகளைப் பகிர்ந்து அவர்களுடன் இணைந்து செயற்பட ஈ. பி. டி. பி முன்வரும்.

7. நாடு தழுவிய அளவில் தமிழ் மக்கள் மீதான அநாவசியப் பாதுகாப்புக் கெடுபிடிகளை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8. யுத்தம் சம்பந்தமான நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான நஷ்ட ஈட்டைத் தாமதமின்றி வழங்க ஏற்பாடு செய்தல்.

9. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீதி விசாரணையின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களை உடன் விசாரிக்க அல்லது விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தல்.

## 2 கல்வி

1) கல்வியில் முன்னணி வகித்த யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்வி நிலையை மீளவும் நன்நிலைக்கு உயர்த்துவதற்கு யாழ். மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்படும் பின்தங்கியபாடசாலைகளிலும்அண்மைக்காலஅனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதிலும் விசேட கவனம் செலுத்தப்படும்.

2) யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே கணனி' ஆங்கில அறிவை மேம்படுத்த பாடசாலைகள் தோறும் கணனி வகுப்புகள், விசேட ஆங்கில வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு விசேட ஏற்பாடு செய்யப்படும்.

3) யாழ். மாவட்டத்தில் நிகழும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை கஷ்டப் பிரதேசங்களாகிய தீவுப்பகுதி, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதில் விசேட கவனம் எடுக்கப்படும். ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய புதிய ஆசிரிய நியமனங்கள், பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள், ஆரம்ப ஆசிரியர்கள் மட்டத்தில் இருந்து வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

4) முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளை விருத்தி செய்யும் முகமாக முன்பள்ளிக் கல்வியில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியாயமான சம்பளப்படி உட்பட நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

5) கல்வியியல் கல்லூரிக்கு உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதி உதவியுடன் சகல வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதி விரைவில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீன்பிடியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதன் செயற்பாட்டுக் காலம் வரையும் செயற்பட உலக வங்கியின் உதவியுடன் புனர்நிர்மாணிக்கப்பட்டு விருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

6) யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியன நவீன தேவைகளுக்கேற்ப உரிய உட்கட்டுமானங்களுடன் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7) யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சர்வதேச தரத்துக்கு ஈடாக வளர்வதற்கு சகல வளங்களை பெற்றுக் கொடுக்கவும் புதிய பீடங்களை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

8) ஏற்கனவே இனம் காணப்பட்ட பொறியற்பீடத்தை விரைந்து உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9) மூன்றாம் நிலைக் கல்விச் செயற் பாடுகளை (Tertiary Educationl Activities) எமது பிரதேசத்தில் வளர்த்தெடுக்க முன்னின்று உழைத்தல்.

10) இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று நிலவும் குறைபாடுகளை அகற்றி அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11) சிங்களப் பேரினவாதிகளால் 1981ம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ். பொதுநூல் நிலையம் மீண்டும் அதே பொலிவுடன் திகழ நடவடிக்கை எடுக்கப்படும்.

12) எமது பிரதேசத்திற்குரிய இடைநிலைக் கைத்தொழில்களுக்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13) நவீன கல்விச் செல்நெறியுடன் ஆசிரியர் தரத்தினை உயர்த்துவதற்கு ஆசிரியர் நிலையங்களை தொழிற்பட வைப்பதுடன் சிறப்பாக நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

14) யுத்த சூழலில் வாழும் ''ஈழமாநிலத்தில்'' உள்ள பாடசாலை மாணவர்களின் போஷாக்கு இன்மையை நிவர்த்தி செய்திட சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் விசேட சத்துணவுத் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. விளையாட்டு

1) யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத் துறையினை விருத்திசெய்ய பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2) நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டரங்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3) அனைத்து வசதிகளும் உடைய உள்ளக விளையாட்டரங்கு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. விவசாயம், நீர்ப்பாசனம்

1) விவசாயிகளது விளைபொருட்களை யாழ். குடாநாட்டிற்கு வெளியே சந்தைப்படுத்தி உரிய இலாபத்தைப் பெற கொள்வனவு வசதி, களஞ்சிய வசதி, போக்குவரத்து வசதி ஒழுங்குகள் செய்யப்படும்

2) விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகள், உரிய நேரத்தில்' உரிய அளவில், நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இவற்றில் உர வகைகளுக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும்.

3) விவசாயச் செயற்பாட்டில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், விவசாயப் செயற்பாட்டிற்குரிய நிர்வாகம் விவசாமயப் பயிற்சி, விவசாய ஆய்வு மற்றும் விவசாய சேவைகள் ஆகியன நவீன முறையில் விஸ்தரிக்கப்படும்.

4) யாழ். குடாநாட்டில் மீண்டும் மண் வளப் பரிசோதனை நிலையம் சகல வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5) விவசாயிகள் விவசாயக் கடன்களை குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ள வசதி அளிக்கப்படும்.

6) இதுவரை காலமும் செலுத்தி முடிக்கப்படாத விவசாய வங்கிக் கடன்களை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7) எமது பிரதேசத்தில் கமநல வங்கிகள் திறக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8) சண்டிலிப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் புதிய கமநல சேவை நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9) விவசாயிகளுக்கு உதவி புரிந்து பிரதேச விவசாய அபிவிருத்திக்கு உதவுவதற்காக ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் ஒருவர் என்ற அடிப்படையில் 435 விவசாய உதவியாளர்களை (கொவி செவன நியமகே) யாழ். மாவட்டத்தில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10) விவசாயக் குடும்பங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விவசாயக் குடும்பங்களுக்கான விசேட வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

11. குடாநாட்டில் உள்ள பனை, தென்னை வளங்களை பாதுகாப்பதற்கு வருடாந்தம் ஒரு லட்சம் தென்னை, பனை மரங்கள் நாட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பரந்தளவில் பயன்தரும் மரங்கள் நாட்டும் திட்டம் விசேட கவனத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டு குடாநாட்டு வனவளம் பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. விவசாய அபிவிருத்திக்கும் நிலத்தடி நீர்மட்ட உயர்விற்குமாக வழுக்கியாறை அடிப்படையாகக் கொண்டு புதிய குளங்கள் அமைக்கப்படுவதுடன் செயற்பாட்டிலுள்ள குளங்களும் ஆழமாக்கப்படும்.

13. உவர் நீரால் பாதிக்கப்படும் விவசாயச் செய்கை நிலங்கள் உவர்நீரால் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு புதிய உவர் நீர் தடுப்பான்கள் நிர்மாணிக்கப்படுவதுடன் ஏற்கனவே செயற்பட்டு வருபவை புனரமைக்கப்படும்.

## 5. மீன்பிடி

1. குடாநாட்டுக் கடலில் தற்பொழுது அமுலில் இருக்கும் மீன் பிடிப்பதற்கான கடல் எல்லை, நேரம் ஆகியவற்றைப் படிப்படியாக விரிவுபடுத்துவதுடன் மீனவர்கள் மீது பிரயோகிக்கப்படும் அர்த்தமற்ற பாதுகாப்பு கெடுபிடிகள் நீக்கப்பட்டு சுமுகமாக தொழில் செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

2. மீனவர்களுக்குரிய மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வள்ளங்கள் ஆகியவற்றை கொழும்பில் இருந்து தருவிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அவை உடனே நீக்கப்படும்.

3. மீனவர்களது கடல் உணவுப்பொருட்கள் யாழ் குடாநாட்டிற்கு வெளியே சந்தைப்படுத்த உரிய வசதிகள் அளிக்கப்படும்.

4. மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள வங்கிக் கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மீனவர் குடும்பங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தெற்கில் மீனவர்களுக்கென அமுல்படுத்தப்படும் சகல செயற்பாட்டுத் திட்டங்களும் குடாநாட்டிலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

6. வீட்டு வசதிகள் இல்லாத மீனவ குடும்பங்களுக்கு அவ் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

7. மீன்பிடித்துறையை நவீனமயப்படுத்த பல்கலைக்கழக மட்டத்தில் பாரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவ் ஆய்வுகள் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 6. நிர்வாகம்

1. யுத்தத்தினால் அழிவடைந்து போயுள்ள யாழ் நகரத்தினை நாம் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு ஒன்றரை வருடங்களில் புதுப்பொலிவுடன் மீளக்கட்டியெழுப்புவோம்.

2. சாவகச்சேரி, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளில் கொடிகாமம், அச்சுவேலி என இரு புதிய செயலகப் பிரிவுகள் புதிதாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. காரைநகர் பிரதேசத்திற்கு தனியான பிரதேச செயலகப் பிரிவு அமைக்கப்படும்.

4. யாழ். மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு சனத்தொகை அடிப்படையில் 250 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவகர் என்னும் அடிப்படையில் கிராமசேவகர் பிரிவுகள் உருவாக்கப்பட்டு புதிய கிராமசேவகர் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

5. நல்லூர், கோப்பாய், மானிப்பாய், கரவெட்டி பிரதேச சபைகள் நகரசபைகளாக தரமுயர்த்தப்படும்.

6. எமது பிரதேசத்தில் நிலவும் விசேட சூழ்நிலையை கருத்திற் கொண்டு வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களுடன் விசேட நிதியும் வ்ழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 7. வேலைவாய்ப்பு

1. குடாநாட்டில் உள்ள சகல அரச அலுவலகங்களிலும் உள்ளூராட்சி அலுவலகங்கள் உட்பட உள்ள சகல வெற்றிடங்களும் நாம் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு 6 மாத காலப்பகுதிக்குள் நிரப்பப்படும்.

2. குடாநாட்டில் உளள சகல அரச அலுவலகங்களிலும் - உள்ளூராட்சி அலுவலகங்கள் உட்பட உள்ள சகல அமைய ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

# தேர்தல் விஞ்ஞாபனம்....

3. மரபுவழிப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் கல்வி நிறுவனங்களில் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றவர்கள் அவர்கள் பட்டம் பெற்று ஒன்று தொடக்கம் இரண்டு வருடங்களுக்குள் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும். நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும் வரை அவர்களுக்குத் தற்காலிக வேலை வாய்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.
4. க.பொ.த. சாதாரண, உயர்தரங்களில் சித்தியடைந்தவர்களுக்கு அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையிலும் சித்தியடைந்த காலங்களின் அடிப்படையிலும் தற்காலிக நிரந்தர வேலைவாய்ப்பு உரிய மட்டங்களில் வழங்கப்படும்.
5. அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக மறைமுக வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

## 8. பெண்கள், குழந்தைகள்

1. பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கான சமூகப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுககப்படும்.
2. உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களின் பெண்கள் தலைமையேற்று நடத்தக்கூடிய சுயதொழில் வாய்ப்புத் திட்டம் முன்வைக்கப்படும்.
3. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களுக்கு விசேட நலவாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட விசேட வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.
4. பால் வேறுபாடின்றி பெண்கள் கொண்டிருக்கும் திறமைகளுக்கு உரிய இடம் வழங்கப்படும்.
5. பெண்கள் முகம் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் - தீர்வுகாண விசேட நிர்வாகப் பிரிவுகள் பிரதேச செயலாளர் மட்டத்தில் அமைக்கப்படும்.
6. பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் விசேட கவனமும் முன்னுரிமையும் அளிக்கப்படும்.
7. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்கு உணவு சீரான முறையில் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

## 9. சுகாதாரம்

1. யாழ். போதனா வைத்தியசாலை நவீன வசதிகள் கொண்ட வைத்தியசாலையாக மாற்றி அமைக்கப்படும்.
2. யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, விபத்துப் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகள் புறநகர்ப் பகுதியில் சகல வசதிகளுடன் விசாலமான இடப்பரப்பில் வெளிநாட்டு நிதி உதவியுடன் அமைக்கப்படும். சகல இடங்களிலிருந்தும் வைத்திய சாலைக்குப் போக்குவரத்து வசதியளிக்கப்படும்.
3. யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவு, இருதய நோய்ப்பிரிவு, புற்று நோய் பிரிவு என்பன தனியான பிரிவுகளாக சகல வசதிகளுடன் இயங்க ஏற்பாடு செய்யப்படும்.
4. யாழ். போதனா வைத்தியசாலை உட்பட யாழ். குடாநாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் ,மகப்பேற்று மருத்துவப் பிரிவுக்கு விசேட வசதிகள் அளிக்கப்படும்.
5. சகல வைத்தியசாலைகளிலும் உள்ள வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.
6. தொகுதிக்கொரு மாவட்ட வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டு சேவைகள் விஸ்தரிக்கப்படும்.

## 10. இடப்பெயர்வும் மீளக்குடியமர்வும்

1. குடாநாட்டு நிலத்தில் புதையுண்டுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் யாவும் அகற்றப்படுவதுடன் மக்கள் வாழும் பகுதிகளில் மீளவும் இவ் வெடி பொருட்கள் புதைக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் மக்கள் தமது சொந்த இடங்களில் விரைவில் மீளக்குடியமர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
3. அரசினால் வழங்கப்படும் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய நிவாரண நிதி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நாம் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு3மாதங்களுக்குள்பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.
4. யுத்த வன்செயல்களால் உயிரிழப்பு மற்றும் சொத்தழிப்புகளினால் ஏற்பட்ட சேதங்களுக்கு அரசு வழங்கும் நஷ்டஈட்டை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவு அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் வரை நிறுத்தப்படாது தொடர்ந்தும் வழங்கப்பட உறுதிசெய்யப்படும்.
6. ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் மாதாந்த ஒய்வூதியம் பெறும் இளைப்பாறிய மீள்குடியேறிய சகலருக்கும்உலர் உணவு வழங்க நடவடிக்கைஎடுக்கப்படும்.

## 11. கைத்தொழில் மற்றும் மூலவளங்களின் பயன்பாடு

1. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைகள் அச்சுவேலி தொழிற்பேட்டை ஆகியன மீண்டும்விரைவில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2. பனை, தென்னை வளங்களில் இருந்து அதி உச்ச பயன்களைப் பெற்றுக்கொள்ள விசேட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொளளப்படும்.
3. மட்பாண்டக் கைத்தொழிலிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.
4. யாழ். குடாநாட்டில் சிறு கைத்தொழில் முயற்சிக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.
5. பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீளமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
6. யாழ். குடாநாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளான விவசாயம்,மீன்பிடிஆகியவற்றை எவ்வித அச்சுறுத்தலின்றி மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்கல்.

## 12. மின்சாரம்

1. 24 மணி நேர மின்சாரத்தினை குடாநாட்டின் சகலபகுதிகளிலும்-சகல வீடுகளுக்கும் சகல நிறுவனங்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்படும்

## 13 போக்குவரத்து

1. குடாநாட்டிற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமான தரைவழிப்பாதை தடங்கலின்றி நடைபெறக்கூடிய சூழ்நிலை தோன்றும்வரை யாழ். திருமலை கப்பற் சேவையை தினமும் I_RC வழித்துணையுடன் நடத்த ஒழுங்குசெய்யப்படும்.
2. சகல பஸ் போக்குவரத்துப் பாதைகளினூடாக சேவையில் ஈடுபடுத்தப்படும் அரச பஸ் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
3. தனியார் போக்குவரத்துத் துறையினை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய தனியார் பஸ் வண்டிகளை கொள்வனவு செய்வதற்கு கடன் வசதிகளும் கொழும்பிலிருந்து பஸ் வண்டிகளை யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
4. குடாநாட்டில் உள்ள சகல வீதிகளும் மீளத் திருத்தி அமைக்கப்படும்.

## 14. தபால், தொலைத்தொடர்பு

1. எண்பது மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடன் புதிய யாழ். பிரதம தபாலகக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படும்.
2. தபால், தொலைத் தொடர்பு சேவைகள் குடாநாட்டில் திறம்பட முன்னெடுக்க அங்குள்ள பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.
3. தொலைத்தொடர்பு வசதியைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்து காத்திருப்பவர்களுக்கு நாம் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டதும் உடனடியாக புதிய இணைப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 15 தொழிலாளர் நலன் கூட்டுறவு

1. சொத்திழப்பிற்கு உள்ளாகியிருக்கும் இடம்பெயர்ந்த கூட்டுறவு அமைப்புக்களுக்கும் யுத்த அனர்த்தங்களினால் இழப்புக்களை சந்தித்த கூட்டுறவு அமைப்புக்களுக்கும் நிவாரணத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.
2. பருவகால தொழிலிழப்புக்கு உள்ளாகின்ற சகல தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான வருமானத்தை உறுதிப்படுத்தும் திட்டங்கள் முன்வைக்கப்படுவதுடன் அவர்களது உற்பத்திக்கான உரிய சந்தை வாய்ப்பும் பெற்றுத்தரப்படும்.
3. கூட்டுறவு ஊழியர்கள் சம்பளத் திட்டத்தினை திருப்திகரமான நிலைக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
4. குடாநாட்டிலுள்ள கூட்டுறவாளர்கள், தொழிற்சங்கத்தினர், சிறு கைத்தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் தொழிலாளர்களது உரிமைகளை மதித்து அவர்களது நியாயமான கோரிக்கைகளை - அதாவது சம்பள உயர்வு, ஒய்வூதியம் மற்றும் பிற விடயங்களை – நிறைவேற்ற உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 16. மக்கள் நலன்

1. யுத்தத்தினால் கைவிடப்பட்ட முதியோர்களை விசேடமாகப் பராமரிக்க புதிய, சகல வசதிகளுடன் கூடிய முதியோர் இல்லங்கள் அமைக்கப்படுவதுடன் தற்பொழுது பாவனையிலுள்ள முதியோர் இல்லங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு சகல வசதிகளும் அளிக்கப்படும்.
2. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானவர்களுக்கு விசேட சலுகை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட விசேட வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.
3. யாழ் மாவட்டத்திலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாரியளவிலான குடிநீர் விநியோகத் திட்டம் வெளிநாட்டு நிதி உதவியுடன் எமது பதவிக் காலத்தில் செயற்படுத்தப்படும்.
4. யுத்தத்தினால் மனநலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதுடன் மனநலக் காப்பகங்கள் அவர்களுக்கென அமைக்கப்படும்.

## 17. பண்பாட்டு வளர்ச்சி

1. நல்லூர் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் யாழ் புனித மரியன்னை பேராலயம் (பெரிய கோயில்) ஆகிய ஆலயங்களின் சுற்றாடல் புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
2. சகல மதங்களுக்குமுரிய வழிபாட்டுத் தலங்களின் புனிதத் தன்மையும் அவற்றிற்குரிய சுதந்திரமும் பேணிப் பாதுகாக்கப்படும்.
3. எமது பிரதேசத்தில் கலை, இலக்கிய மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் ஊக்கமும் அளிக்கப்படும்.

## 18. பொதுவானவை

1. குடாநாட்டிற்குரிய உணவு மற்றும் சகல பாவனைப் பொருட்களும் கொழும்பில் இருந்து வடபகுதிக்கு எவ்வித தங்குதடையுமின்றி தேவையான அளவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதனால் வடபகுதியில் பொருட்கள் தட்டுப்பாடு, கள்ளச் சந்தை விலையேற்றம் என்பன தடுக்கப்படும்.
2. கொழும்பில் இருந்து வடபகுதிக்கு பொருட்களை கொண்டுவரும் வர்த்தகர்களுக்கு தங்களது பொருட்கள் சேதத்திற்கோ அல்லது அழிவிற்கோ உள்ளாகுமாயின் அரசினால் நஷ்டஈடு வழங்க உறுதி செய்யப்படும்.
3. வர்த்தகர்கள் தங்கள்வியாபார நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொள்வதற்காக விசேட வங்கிக் கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்துகொடுக்கப்படும்.
4. நகை வர்த்தகர்களுக்கு வங்கிகள் மூலம் தங்கம் வழங்க ஏற்பாடு செய்துதரப்படும்
5. மத்திய மாகாண அரசுகளின் கீழ் பணிபுரியும் அரச ஊழியர்கள் தங்களது சேவைகள் குறித்து எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவும் நாம் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டு 6 மாத காலத்துக்குள் தீர்த்துவைக்கப்படும் என உறுதி செய்கின்றோம்.
6. குறிப்பிட்ட வருடங்களுக்கு மேல் அரச நிறுவனங்களில் தற்காலிகமாக பணியாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.
7. சுமுகநிலை தோன்றும்வரை சகல அரச நிறுவனங்களிலும் பணியாற்றுபவர்களுக்கு ஆபத்துப்படி தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

குறிப்பு: இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல், சட்டம், ஒழுங்குவிடயம் ''ஈழமாநிலத்திற்கு'' பொதுவானதாகவும், ஏனையவிடயங்கள் யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டத்திற்குரியதாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஏனையமாவட்டங்களுக்குரிய அரசியல், சட்டம், தவிர்ந்த ஏனையவிடயங்கள் பிரத்தியேகமாக அந்தந்த மாவட்டங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்! என்றும் நாம மக்களின் நண்பர்கள்**

## இன்று ஒரு தகவல்

# தூயபக்தியின் வெளிப்பாட்டால் பக்தன் பகவானாகலாமா?

காலங்களைகடந்து, உலகங்களைஆளும் பகவான் அழகிய மரச் சூழலிலே அமர்ந்திருந்தார். அங்குநிலவிய சிலு சிலு காற்றும், மலர்ந்த புஸ்பங்களும், அங் கொருதெய்வீக உணர்வினையே ஏற்படுத்தியிருந்தன.

பகவான் திருவடியின் கீழ் இருந்து பக்தன் தொண்டு செய்து கொண்டிருந்தான். பகவானுக்கு அவன் மிகவும் அணுக்கத்தொண்டன்.

இவர்களிடையே அன்றும், ஒரு எதிர்வாதம் வந்தது.

பகவான் ''நான் அண்ட சராசரங்களையும் எனக்குள்ளே அடக்கிவைத்திருப்பவன்'' என்றார்.

''அதற்கு'' உன்னை என் காது வழியே நுழைத்து என் இதயத்தில் அடக்கி வைத்திருப்பவன் நான். ஆகவே உன்னை விட உயர்ந்தவன் நான்'' என்றான் பக்தன். வேறுயாருமில்லை; அவன் நம்மாழ்வார்தான்.

காது வழியே நுழைத்துவிட்டேன் என்று சொல்வதில் தத்துவம் ஒன்று அடங்கியுள்ளது. குருவினிடமிருந்து இறைவன் நாமத்தை உபதேசமாகப் பெற்று, அவனை இதயத்தில் வைத்து பூஜித்து பக்தி செய்வதையே அது குறிக்கிறது.

# வீதிகளில் லொறிகள் நிறுத்தம் பொதுமக்கள் பெரும் சிரமம்

(கல்வயல்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் கொண்டுவரப்படும் பொருட்கள், காங்கேசன்துறை வீதியிலுள்ள மனோகரா படமாளிகையில் களஞ்சியப்படுத்தப்படுகிறது.

இதன்காரணமாக நாவலர் வீதியிலும், காங்கேசன்துறை வீதியிலும் வரிசையாக லொறிகள் நிறுத்திவைக்கப்படுவதால், இவ்வீதிகளில் பயணஞ்செய்யும் பொதுமக்களும், வாகனங்களில் பயணம் செய்வோரும் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இவ்விடயத்தினை சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொண்டு இதற்குரிய நடவடிக்கையினை எடுத்தால் பொதுமக்களினதும் வாகனங்களில் பயணஞ்செய்வோரினதும் சிரமங்கள் பெரிதும் குறைக்கப்படும்என பொதுமக்கள்தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-111)

## சண்டிலிப்பாய் பகுதியில்
# 60சத வீதமான கர்ப்பிணிகளுக்கு இரத்த சோகை நோயாம்

(யாழ்ப்பாணம்)

யாழ், குடாநாட்டின் சண்டிலிப்பாய் பகுதியில் 60 சத வீதமான தாய்மார்களிற்கு இரத்த சோகை நோய் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் உதவி அரசாங்கப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் நிலவும் யுத்த சூழ் நிலையினால் கர்ப்பிணித்தாய்களிற்கும், பாலூட்டும் தாய்களிற்கும், பாலர், சிறுவர்களிற்கும் போஷாக்கான உணவுகள் உட்கொள்வது சாத்தியமற்றதாக காணப்படுவதே இக்குறைபாட்டிற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

தாய்மாரில் காணப்படும் போஷாக்கின்மையால் குழந்தைகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. என தெரிவிக்கப்படுகிறது. (க-த)

# சாரதிகள் 2 ஆம் வகுப்பிற்கான நேர்முகப்பரீட்சை 03 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவைக்கு சாரதி 2 'ஆ' வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு 1999 இல் தோற்றி சித்திபெற்ற பரீட்சார்த்திகளுக்கு அடுத்தமாதம் மூன்றாம்திகதி நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்நேர்முகப்பரீட்சைக்கு சுப்பையா கதிர்காமநாதன்- ஊரெழு கிழக்கு, கணபதிப்பிள்ளை மோகனலிங்கம்-அல்லாரைவடக்கு, தியாகராசா சிவநடேசன் புலோலி வடகிழக்கு, வேலாயுதபிள்ளை ஸ்கந்தராசன் - பிரம்படிலேன் கொக்குவில் வீரகத்தி தர்மகுலசிங்கம் -கரணவாய் தெற்கு, வெற்றிவேல் லோகநாதன் - நவாலி கிழக்கு என்பவர்கள் தகுதிகாணப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ். செயலகத்தில் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் முதல்தடவையாக இந் நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது. (க-12)

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய பரிசளிப்பு விழாவும், பாடசாலைப் பெயர்வலைவு திரைநீக்கமும் இன்று சனிக்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

## வாணிவிழாவும் கலை நிகழ்வும்

[யாழ்ப்பாணம்]

சித்தன்கேணி பாரதி கல்வி நிறுவனத்தின் வாணி விழாவும் காலை நிகழ்ச்சியும்இன்று சனிக்கிழமை பி.ப 1. 30க்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் ஆசிரியர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு நிர்வாக சார்புரையை இந்துநாகரிக விரிவுரையாளர் எஸ். அருள்நங்கை வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வில்மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(த)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்]

மரியதாஸ சலாநிதி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[செ]

## அச்சக ஊழியர் இடை நிறுத்தம்

(கொழும்பு)

அரச அச்சகத்தில் பணிபுரியும் இருவர் கடமையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சகத் தலைவர் நெவில் நாணயக்காராவின் உதவியாளர்களாக இருந்த இருவரே வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (ந)

## இலவச மருத்துவ முகாம்

(தென்மராட்சி)

மானிப்பாய் பரீஷ், கொக்குவில் மற்றும் சாவகச்சேரி லயன்ஸ் கழகங்கள் இணைந்து ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையில் ஓர் இலவச மருத்துவபரிசோதனை முகாமினை அண்மையில் நடத்தியுள்ளன.

இம்முகாமில் ஆனைக் கோட்டைப் பகுதியில் இருந்து வருகை தந்திருந்த 75பேருக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு, மற்றும் கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவ பரிசோதனைகளை சுழங்களின் வைத்தியர்களும், கண்பரிசோதனையை லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ மேற்கொண்டிருந்தனர் என சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் செயலாளர்லயன்கே. சிவபால சுப்பிரமணியம் தெரிவித்தார். செ77

## நவராத்திரி நாயகியை வலம்புரியில் வழிபடுவோம்



### "கவிதை மாலை"
### வரம் அருள்பவளே

நவசக்திகளின் வடிவமமே துர்க்கா
வண்ண மதியாய் வளர்பவளே துர்க்கா
ராகங்களின் சரணமாய் விளங்குபவளே துர்க்கா-உ
த்தமியே வண்ண மலரே துர்க்கா
தித்திக்கும் வாழ் பளிப்பவளே துர்க்கா-சூ
ரிய கதிர்கள் ஒளியானவளே துர்க்கா
யின் வீரத்தாயே துர்க்கா

பா. சாரங்கன் தரம்-5
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

★ ★ ★

### காத்திடம்மா

மானிலத்து மாந்தரெல்லாம்
மகுடா சூரர்களாய்
மண்டலத்தை அழிக்கின்றனர்
அகந்தை இருள் நீக்கி
அருள் ஒளி பரப்பி
அகிலத்தை காத்திடம்மா

அ. துவாரகா தரம்-8
யா/இராமநாதன் கல்லூரி

★ ★ ★

### துணைபுரியம்மா !

துதிப்போர்க்கு நல்லவரமருளும் துர்க்கையே
வாழ்வோர்க்கு வீரம் நல்கும் துர்க்கையே
தலை நிமிர்ந்து வாழத் துர்க்கையே
தரணியே நீ துணைபுரியம்மா

ச. அருள் அமுதா தரம்-9
கனகரட்ணம் ம.ம. வித்தியாலயம்

★ ★ ★

### தமிழருக்கு ஒரு வாழ்வைத் தா !

நித்தம் படும் துயர் நீ யறியாம லிருப்பதா-தாயே
நில்லாத புயலான போரினை நிறுத்த வழியில்லையா
புத்தம் புது வாழ்வினை தமிழருக்கு அருளாயா?
புவனமெங்கும் உன்னை கொலுவிருத்தி கும்பிட்டு
கேட்கிறோம்

செல்வி என். தேவப்பிரியா க.பொ.த (உ/த)
யா/கனகரத்தினம் ம.ம வித்தியாலயம்

★ ★ ★

### நவராத்திரி நாயகி துர்க்கை

சிங்கத்தில் வீற்றிருக்கும் சிங்காரியே
சிறப்புடன் காத்திடுவாய் எம்மையே
வினையெல்லாம் தீர்த்திடுவாய் முகாம்பிகையே
வீரத்தை தந்திடுவாய் வீராங்கனையே

ஆக்கம் :- ச. சுவப்னா ஆண்டு-10 A
யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்

★ ★ ★

### கையேட்டில் எழுதிவிடு தமிழன் சரித்திரத்தை

அலை மகளே அம்மா அம்பிகையே
அகிலமாளும் வரம் கொடு தமிழனுக்கு
மலை மகளே மங்கை மதியாளே
மனமதில் குறை நீங்க வழிவிடு
கலை மகளே கற்பகச் செல்வியே-உந்தன்
கையேட்டில் எழுதிவிடு தமிழன் சரித்திரத்தை
தலை வணங்கி தூபமிட்டு-உனைப்
போற்றி நவராத்திரியில் துதிப்பதற்கு !

எம். பிருந்தா (A/L கணிதப் பிரிவு)
யாழ் இந்து மகளிர் கல்லூரி


# சுயேச்சை குழு இல-3 (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி)

✶ விதவைகளினதும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களினதும் நல்வாழ்விற்கான நலன்திட்டம் உருவாக்குவோம்.

முதன்மை வேட்பாளர்
வேல்முருகு தங்கராசா
உங்கள் வாக்கைத் தொலைபேசிக்கே தந்திடுங்கள்





(ஓ 880)

# தமிழக அரசியலை ஆட்டிப்படைக்கும் அண்ணன் தம்பி உறவு

# அடுத்த முதல்வர் ஸ்டாலினா? அழகிரியா?

## முடிவெடுக்க முடியாத நிலையில் மக்கள் திணறல்

அரசியலில் அடுத்த வாரிசு யார் என்ற போட்டி இன்று நேற்றுத் தொடங்கிய ஒன்றல்ல.

ஒரு நாட்டுக்குஉரியபோட்டியுமல்ல எந்த நாட்டிலும் அவ்வப்போது தோன்றி நாட்டு அரசியலை ஆட்டிப் படைக்கின்ற சங்கதியாகும்.

தமிழ் நாட்டில் இப்பொழுது அண்ணன் தம்பிக்குள் அடுத்த வாரிசுப்போட்டி எழுந்துள்ளது.

முதல்வர் மு. கருணாநிதிக்குப் பின்.மு.க. ஸ்டாலின், .மு க அழகிரியா என்றவாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. இரண்டு அணிகளும் நியாயம் கற்பிக்கின்றன.

இந்தியாவில் இந்த அரசியல் வாரிசுப் போராட்டம் அன்று நேருவிற்குப் பிறகு யார் என்ற கேள்வி எழுந்த போது அன்றிருந்த நிலையில் காமராஜர் வருவார் என்று எதிர்பார்த்தார்கள் ஆனால் லால்பகதூர் சாஸ்திரி பிரதமரானார் சாஸ்திரிக்குப் பின் யாரும். எதிர்பாரத்திராதவாறு. இந்திராகாந்தி பிரதமராக பதவியேற்றார்.

இதே போன்று தமிழ் நாட்டில் அண்ணாவிற்கு பிறகு நாவலர் வருவார் என்று எதிர் பார்த்தனர். இறுதியில் முதல்வர் மு.கருணாநிதி முதல்வரானார்.

இங்கு மு. கருணாநிதிக்குப் பிறகு யார் அரசியல் வாரிசு என்ற வினாவிற்கு விடைதேடிய போது பல உண்மைகள் வெளியாகின. மு. க. அழகிரி ஒரு தாயின் பிள்ளை அரசியலில், தொண்டர் மட்டத்திலும் எம்.எல். லேக்தள மட்டத்திலும் செல்வாக்குள்ளவரெனத் தெரிவிக்கப்படுகிறது. மு. க அழகிரியின் தாயார் இறந்துவிட்டார்.

மு. க ஸ்டாலின் கருணாநிதியின் இன்னொரு மனைவியின் மகன், மனைவியும் இருக்கிறார். இரண்டு பிள்ளைகளும் என் சொல்லைக் கேட்குமென்றும்வெளி ஆட்கள் வீணே சிண்டுமுடிகிறார்கள் என்றும் சொல்கிறார் முதல்வர்.

பலவருடங்களுக்கு முன்பே அடுத்த வாரிசுப் போட்டியே அழகிரிக்கும் ஸ்டாலினுக்குமிடையில் தொடங்கி விட்டதாக அரசினை அவதானிகள் கருதுகிறார்கள்.

முதல்வரின் மூத்த மகன் ஸ்டாலினுக்கு 48 வயதாகிறது 22 வருட அரசியல் அனுபவம் வாய்ந்தவர் இவர்.

### துரையர்

ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் தி மு. கவினர் சிறைப் பிடிக்கப்பட்ட பொழுது ஸ்டாலினும் சிறை பிடிக்கப் பட்டு பொலிஸார் அடிக்கப் போக தடுத்த சிட்டிபாபுவும் பாலகிருஷ்ணனும் இறந்து போனார்கள்.

அன்று தீவிரமாக அரசியலில் ஈடுபடத் தொடங்கியவர் பல தியாகங்களைச் செய்து எம்.எல்.ஏ. ஆனார்.

அவ் வேளையில் அடுத்த வாரிசு ஸ்டாலின்தான் என்று சிலர் கருதினார்கள். ஆனால் இவருக்கு இரண்டொரு எம்.எல்.ஏக்கள்தான். ஆதரவு கொடுத்தார்களென்றும் மற்றவர்களுடன் குறிப்பாக எம்.எல். ஏக்களுடன் நெருங்கிப்பழக மாட்டார் என்றும் அடுத்த வாரிசிற்கு இவர் பொருத்தமானவராகப்படவில்லை என்றும் அரசியல் வாதிகள் மட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஸ்டாலின் மாநகர முதல்வராக வந்து செய்த சேவைகள் அளப்பரியன.

வெளிநாட்டவர்கள் வரும் பொழுதெல்லாம் ஸ்டாலினை எந்த நிகழ்வுகளில் காணலாம். ஒரு வேளை மாநகர முதல்வர் என்றவகையில் எல்லா வைபவங்களிலும் கலந்து கொள்ள வேண்டுமே என்ற கடமையும் உரிமையும் உண்டல்லவா?

இதனால் அடிக்கடி தொலைக் காட்சியில் காட்டுமளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறார் ஸ்டாலின்.

இதேவேளை மு.க அழகிரி கட்சியில் உள்வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவருக்கு கிராமப் புறங்களில் செல்வாக்கு இருப்பதாகவும் பரவலாக கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மு.க. அழகிரி மற்ற அரசியல் வாதிகளை விட சற்று மாறுபட்ட போக்குடையவரென்றும் தீவிரவாதபோக்கு உடையவரென்றும் சொல்லப் படுகிறது. தாயில்லாப் பிள்ளை தானே என்று சற்று ஒதுக்கிவைக்கப்படுகிறார் என்றும் பேசப்படுகிறது.

இதை உள்வீட்டுப் பிரச்சினையென்று கட்சிக்கு சிலர் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

அண்மையில் தி மு க கட்சி நடவடிக்கைகளிலிருந்து மு.க அழகிரியை ஒதுக்கிவிட்டதாகவும் அவருடன் எத்தொடர்பும் வைக்கவேண்டாம் என்று தி.மு.க. பொதுச் செயலாளர் அறிவித்திருந்ததும் அரசியல் நோக்கர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

### பொருட்கள் சேதம்

அழகிரியின் ஆட்கள் மதுரையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வன்செயல்களில் ஈடுபட்டதையடுத்து அதனால் பல கோடி பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு சந்தர்ப்பத்தில் ஆர்க்காடு வீராசாமி அழகிரியின் அரசியல் நகர்வுகளைப் பார்த்து விட்டு ஸ்டாலின் கலைஞருக்குப் பின் வருவார் என்பது 100 வீதம் தவறானது என்று கூறியிருக்கிறார்.

இதேவேளை கலைஞர் மு.க. மௌனம் சாதிப்பதும் உள்வீட்டு விவகாரங்கள் என்று மு. கருணாநிதியின் அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவிப்பதும் மாற்றுக் கட்சிகள் மு.க. அழகிரியின் செயல்களைக் குறித்து கருத்துத் தெரிவிப்பதும் முதல்வர் அடுத்த தேர்தலில் தானே மீண்டும் மாநில அரசைக் கைப்பற்ற கைக்கொள்ளும் அரசியல் சாணக்கிய விளையாட்டோவென்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

---

மேற்கு ஜெருசலேமில்

## வன்முறைகள் வெடித்தன கிளர்ச்சியாளர் பொலிஸார் மோதல்

(ஜெருசலேம்)

மேற்கு ஜெருசலேமில் வன்முறைகள் தொடங்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனக் கிளர்ச்சியாளருக்கும் இஸ்ரேலிய பொலிஸாருக்குமிடையில் இந்த சண்டை மூண்டுள்ளதாகவும் டயர்களை எரித்தும் கற்களை வீசியும் இந்த தீவிரவாதிகள் பொலிஸாருடன் சண்டையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாலஸ்தீனிய உயர் அதிகாரிகளும் இஸ்ரேலிய உயர் அதிகாரிகளும் தனித் தனியே அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. (து)

## மாவோ தீவிரவாதிகள் தாக்கியதில் 8 காவல் துறையினர் பலியாகினர்

(கத்மண்டு)

தலை மறைவு மாவோ இயக்கம் காவல் நிலையத்தைத் தாக்கியதில் 8 பேர் இறந்தனர்.

நேபாளத்தில் ஸஞ்சன் மாவட்டத்தில் காவல் நிலையம் மீது தீவிரக் குழுவான மாவோ தீவிரவாதிகள் தாக்கினர். தாக்குதல் பல மணி நேரம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் காவல் துறையினரின் வெடி பொருட்கள் தீர்ந்து போனதால் 8 காவல் துறையினர் கொல்லப் பட்டனர் என்றும் 5க்கும்மேற்பட்டோருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (து)

## முன்னாள் இந்திய பிரதமர் குஜ்ரால் உட்பட நால்வர் உயர்விருது பெறுகின்றனர்

(புதுடில்லி)

ரஷ்ய நாட்டுடன் நெருக்கமான நட்புறவைப் பேணிய இந்தியாவைச் சேர்ந்த நால்வருக்கு உயர்விருது வழங்கப் படவுள்ளது.

இவ் உயர் விருதுகளை, ஒக்ரோபர் 2 ஆம் திகதி தொடக்கம் 4ம் திகதிவரையான இந்தியப் பயணத்தின்போது ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புட்டின் வழங்கி கௌரவிப்பானர் என அறிவக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால், மாநிலங்களவைத் துணைத் தலைவர் நஜிபா கப்துல்லா, உச்ச நீதிமன்ற நீதியரசர் வி.ஆர். கிருஷ்ண அய்யர், திரைப்பட இயக்குநர் மருணான்சென் ஆகியோரே இவ் விருதுகளைப் பெறவுள்ளனர். (உ)

---

உதவித்திரைப்பட இயக்குநர்

## நாகப்பன் வீரப்பன் பிடியிலிருந்து இரவோடு இரவாக தப்பி வந்தார்

(சென்னை)

உதவி இயக்குனர் நாகப்பன் வீரப்பன் பிடியிலிருந்து தப்பி வந்துவிட்டார்.

கன்னட பட இயக்குநருடன் மற்றும் ராஜ்குமார் நடிகர் முதலானோர் வீரப்பனிடம் பிணையாட்களாக இருந்ததும் அந்தக்காட்டுக் காவலிலிருந்து தான் நாகப்பன் இரவோடு இரவாக புறப்பட்டு 11 மணித்தியாலங்கள் காட்டில் அலைந்து ஈரோட்டிற்கு வந்ததாகவும்.இதனை அறிந்த காவல் துறையினர் வெப்பக்கச்சனூரில் வைத்து நாகப்பனை விசாரித்து வருதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உதவித்திரைப்பட இயக்குனர் எப்படி தப்பி வந்தார் என்பது பெரிய ஆச்சரியமாக இருக்கிறதென்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி குறிப்பிட்டார்.

### உலக தரிசனம்

இது கன்னட அரசுக்கும் பெரிய அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. (து)

### செய்திப்பரல்

★ தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் முதல்வர் மு. கருணாநிதி கண்ணாடித் தொழிற்சாலையைத்திறந்து வைத்தார்.

★ கர்நாடக மாநிலதலைநகர் பெங்களூரில் நடைபெற்ற கதவடைப்பால் நேற்று நகர் ஸ்தம்பித நிலை அடைந்திருந்தது

★ இஸ்ரேல் எதிர்க்கட்சித் தலைவர் பள்ளிவாசலுக்குச் சென்ற பொழுது பலஸ்தீனர்கள் கல்லெறிந்தார்கள்.

★ வெள்ளத்தால் பங்களாதேஷ்துறைமுகம் இயங்கவில்லை.

## தேர்தல அறிவுறுத்தல கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டது

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபடவிருக்கும் தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கடமை தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதங்கள் தனிச்சிங்கள மொழியில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதங்கள் நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி அரசகரும மொழியாக இருக்கின்ற போதும் சிங்கள மொழியில் கடிதங்கள் அனுப்படுவது தமிழ் மொழியை புறக்கணிப்பதாக அமைகிறது என்று தமிழ் அரச உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந-2)




சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும்
அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிக்க
தோடம்பழம் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுயேச்சைக் குழு-1 X

ஈ. பி ஆர். எல். எவ். சுரேஷ் தலைமை

இலக்கம் 7



தர்மராஜா வில்சன்

(சி-827)

''மனத்தோடு வாய்மை
மொழியின் தவத்தோடு
தானஞ்செய் வாரின் தலை''
- குறள் -

வலம்புரி

## வருமுன் காப்போம்

யாழ். குடாநாட்டில் யுத்தம் ஓய்வதாகஇல்லை. உயிரிழப்புகளும், இடம் பெயர்வுகளும் தொடருங் கதையாகவேயுள்ளது. ஏற்கனவே தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், குடிசைகளிலும் தங்கியுள்ள மக்களின் நிலை பரிதாபத்திற்குரியது.

இந் நிலையில் மாரி காலம் தொடங்கிவிட்டது இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் நோய்த் தொற்றுக்கள் வேகமாக அதிகரிப்பதற்கு வாய்ப்புண்டு

போதிய அடிப்படை வசதியின்மை, போசாக்கின்மை போன்ற காரணங்களினால் தொற்றுநோய்கள் குறிப்பாக உடல் சார்ந்த வியாதிகள் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாகவே இருக்கும்.

இடம் பெயர்ந்து இன்னலுறும் மக்களை நோயும் தாக்குமாயின் அதன் விளைவு பாரதூரமானதாகவே அமையுமென்பதில் சந்தேகமில்லை.

போர் நடைபெறும் நாடுகளில் யுத்தத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கையை விட நோயினாலும், போசாக்கின்மையாலும், மருத்துவ வசதி கிடைக்காமலும் இறந்தவர்களே அதிகம் என்பதை புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந் நிலையை நம் மண்ணில் தவிர்க்க- தடுக்க வேண்டுமாயின் சுகாதாரத் திணைக்களம் விழிப்புடன் செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

நோய்த்தடை நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், தொற்று நோய்க்கட்டுப்பாட்டிற்குரிய தொற்று நீக்கிகளின் மருந்து வகைகள் போன்றவற்றை முன் கூட்டியேதயார் நிலையில் வைத்திருப்பதும் சுகாதாரத் திணைக்களத்தின் முதன்மையான பொறுப்பு.

இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் சுகாதாரக் கல்வியை போதித்தல், தொண்டர் பயிற்சிகளை வழங்கி மக்கள் மத்தியில் மனமாற்றத்தைஏற்படுத்துதல், சுத்தமான குடி நீர் கிடைப்பதை உறுதிப்படுத்துதல் என்ற வகைகளில் சுகாதார ஊழியர்கள் தம் பணிகளைவிரைவாக-விரிவாக முன்னெடுத்துச் செல்வார்களாயின் மாரிகாலத்து தொற்று நோய்க்கு நாம் முற்றுப்புள்ளி வைப்பதுடன் அதனால் ஏற்படக் கூடிய உயிரிழப்புகளையும் உடல் நலிவுகளையும் தடுக்க முடியும்.

# விளையாட்டின் உட்பொருளை விளக்கும்

# அவுஸ்திரேலிய ஒலிம்பிக் போட்டி!

## சிட்னி நோக்கி நல்லெண்ண தூதர்கள்

கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம்

உலகின் எட்டுத் திக்குகளிலும் உள்ள 190க்கு மேலான நாடுகளில் இருந்து நல்லெண்ணத் தூதுவர்களாக சிட்னி நகருக்கு வருகைதந்துள்ள வீரர் வீராங்கனைகள் சாதி, சமய, மொழி பேதங்களை மறுத்து விளையாட்டு வீரர்கள் என்ற ஒரே கோட்பாட்டுடன் விளையாட்டின் உட்கருத்தினை அதாவது SPORTIVE SPIRIT யை பறைசாற்றிக் கொண்டு இருக்கும் இவ் வேளையில் புகழில் உச்ச நிலைக்கு போய்விட்ட சிட்னி நகரை பற்றி ஓரளவாவது அறிந்து கொள்வது மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

இதற்கு முதல் அவுஸ்ரேலியாவின் 16 வது ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற மெல்பேர்ன் நகரம் விக்டோறியா மாநிலத்தில் அமைந்துள்ளது. இதற்கு அண்மையில் உள்ள நியுசவுத் வேல்சின் மாநிலத்தின் தலைநகரம் தான் 27வது ஒலிம்பிக் போட்டி கோலாகலமாக நடந்து கொண்டு இருக்கும் சிட்னி நகரம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வரலாற்றுப் பார்வையில் சிட்னி

சிட்னி நகரின் இதிகாசம் சுவாரசியமானது வரலாற்று சிறப்பு மிக்க இவ் நகரம் கப்டன் ஜேம்ஸ்குக் அன்று அவுஸ்ரேலிய கிழக்கு கடற்கரையினை கண்டபோது விரிகுடாவை பொட்டனி (BOTANY) விரிகுடா என்றும் துறைமுகத்தைஜேக்சன்துறைமுகம் என்றும் பெயரிட்டார்.

அமெரிக்கப் புரட்சிக்கும் பிறகு (1775-1783) பலகுடியிருப்புக்களை பிரிட்டன் இழந்தது. அப்பொழுது பொங்கி வழிந்த பிரிட்டிஷ் சிறைச்சாலைகளுக்குமாற்றும் இடமாகஒன்றுஇங்கு தேவைப்பட்டது. எனவே தண்டனை குடியிருப்பு ஒன்றை நியுசவுத் வேல்சில் கட்ட பிரிட்டன் திர்மானித்தது. அதன் பின்பு 1787ம் ஆண்டில் 11 கப்பல்களின் கூட்டம் 1000 பேர்களுடன் உணவுப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டுநியுசவுத் வேல்ஸின் துறைமுகத்தை வந்தடைந்தது. வந்தவர்களில் 700 பேர் கைதிகள் இத்துறைமுகத்தில் இறக்கப்பட்டனர்.

பெயரின் சிறப்பு

கவர்னரும் கப்டனுமான ஆதர்பிலிப் தலைமையில் பொட்டனி விரிகுடாவை நோக்கி பயணித்து 1788ம் ஆண்டுஜனவரியில் வந்தடைந்தனர் வந்து சேர்ந்த இடம் சதுப்பு (MARSHY) நிலமாக இருந்ததால் பொருத்தமான இடத்தை தேடியவர்கள் சிட்னி கேவ் (SYDNEY COVE) என்ற இடத்தை தேர்ந்தெடுத்தனர். இந்த இடம் ஆழ்நீரில் கப்பல்களை நிறுத்த வசதியாக இருந்ததாலும் குடிநீர்ஏராளமாக கிடைத்தாலும் பிலிப் அந்த இடத்தில் ஜனவரி 26 இல் குடியமர்த்தினார் அந்நாளில்தண்டனை குடியிருப்பு செயலராக பணியாற்றிய பிரபுவின் பெயரே சிட்னி. அதனால்தான் அந்த இடம் சிட்னி என்று பெயர் இடப்பட்டது.

1800 இல் சிட்னி நகரம்மறுபடியும் பிரசித்தி பெற்ற ஓர் துறைமுகமாகவும் வணிகத் தலமாகவும்மாற்றம்பெற்றது. அதனைத் தொடர்ந்து1855ம் ஆண்டு செப்ரெம்பரில் முதன் முதலாக இங்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1932 இல் உலகப் பிரசித்தி பெற்ற சிட்னி துறைமுகப்பாலமும்திறந்து வைக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் புபானிக என்ற கொள்ளை நோய்சிட்னிவாழ் மக்களை தாக்கியதால் பலர் உயிரிழக்க நேரிட்டது. இந்த துர்ப்பாக்கிய நிகழ்வும் சிட்னிக்கு நன்மை பயப்பதாகவே அமைந்தது. ஒரு விந்தையான நிகழ்வாகும்.

நகரின் வளர்ச்சி

கொள்ளை நோய் பரவுவதற்கு எலிகளே காரணமாய் இருந்தன. என்பதை கண்டறிந்ததனால்அவைகளைகூண்டோடு ஒழிக்க சிறுமலை முகடுகளும், துறைகளும், குடிசைகளும்கிட்டங்கிகளும் தரை மட்டமாகஇடித்து தள்ளப்பட்டன. அதன் பின் புதிய வீதிகளும் துறைகளும் நவீன வசதி கொண்ட வணிகவளாகங்களும் ஒரு சில மாதங்களில்துரித கதியில் கட்டி முடிக்கப்பட்டன.

நியுசவுத் வேல்ஸ் மாநிலத்தின்இன்றைய தலைநகரமான சிட்னி நகரில் மாநிலத்தின் 64%மக்கள் வாழ்கின்றார்கள் சிட்னியில் மிகப் பிரபலமான முக்கிய இடங்கள் 2 உண்டு ஒன்று துறைமுகப்பாலம் மற்றையது ஒப்ரா இல்லமாகும். இங்குள்ளகுறைந்த பட்சவெப்பநிலை ஜூன் ஜூலைமாதங்களில் 8 பாகை C கூடியபட்ச வெப்பநிலை ஜனவரி பெப்ரவரி மாதங்களில் 26 பாகை C ஆகும். ஆண்டு மழை அளவு 120செ.மீ. ஆகும். அவுஸ்திரேலிய தட்பவெப்ப நிலையை நன்கு ஆராய்ந்த பின்பே ஒலிம்பிக் போட்டிக் குழு யூலை மாதத்திற்கும் ஒக்ரோபர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலமே உகந்த காலம் என தீர்மானித்து அதற்கமைய நடத்தி வருகின்றது.

அமெரிக்குடிமகன்தன்னை அமெரிக்கன் என்பது போல் அவுஸ்திரேலிய குடிமகன் தன்னை அவுஸ்திரேலியன் என்று கூறிய போதிலும் சிட்னியில் வதியும் மக்கள் தாம் ஒரு சிட்னியன் என்று கூறுவதிலேயே பெருமைப்படுகின்றனர்.

தேர்தல் வன்முறையில்

## ஜே.வி.பியின் மற்றொரு உறுப்பினரும் மரணமானார்

(கொழும்பு)

மாத்தளைப் பகுதியில் கடந்த 25ஆம் திகதி ஜே.வி. பியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே இடம் பெற்ற மோதலின் போது காயமடைந்த ஜே.வி.பி. உறுப்பினர் ஏ.வி. ஸ்ரீதேக (வயது 43) மரணமடைந்தார்.

இவரது மரணம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தவர்களுக்கும் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கும் தெரிவித்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் ஜே.வி.பியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட இம் மோதலுக்கு ஜே.வி.பியினரே காரணமாக அமைந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீதேகவின் மரணம் தொடர்பாக பூரண விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்றுஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் கால வன்முறையில் இது எட்டாவது கொலை என்பதும் ஜே.வி.பியில் மரணமடைந்தவர்களில் இவர் இரண்டாவது நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-2)

விவசாய உபகரணங்கள்

## விநியோகத்தில் பாரபட்சம் கோப்பாய் மத்தி விவசாயிகள் விசனம்.

(கோப்பாய்)

பட்டினிக்கு எதிரானஅமைப்பினால் பயனாளிகளுக்கென வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் யாவும் கோப்பாய் மத்திய விவசாயிகளுக்கு உரிய முறையில் விநியோகம் செய்யப்படவில்லையென சம்பந்தப்பட்டோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வாளி, கத்தி, மண்வெட்டி மற்றும் சிறுதானிய விதைகள் வழங்கப்பட்ட போதும் கூட அவைவசதிகூடியவர்களுக்கும் செல்வாக்கு மிக்கவர்களுக்குமே வழங்கப்பட்டதாகவும் உண்மையில் விவசாயம் செய்வோருக்கும் உரிய முறையில் வழங்கப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சம்மேளன பொருளாளரையோ அல்லது செயலாளரையோ அணுகிக் கேட்டல் இதுவிடயம் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது எனக்கைவிரிக்கின்றானராம்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இப் பொருட்கள் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் பொறுப்பு வாய்ந்தோர் இதுவிடயத்தில் கவனம் எடுக்க வேண்டியது அவசியம் என்றும் பலரும் வலியுறுத்தியுள்ளனர். (க-79)

## கொழும்பை பாதுகாப்பதற்கு பூசகர்களுடன் கூட்டமாம்

### பொலிஸ்மாஅதிபர் ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு நகர பூசகர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று கொழும்பு பிராந்திய பொலிஸ்மா அதிபரினால் நடத்தப்பட்டது.

கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த, பூசகர்களது அந்நியோன்னிய உறவை வேண்டியே மேற்படி சந்திப்பு இடம் பெற்றது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் வெள்ளவத்தை மயூராவதி ஆலய மண்டபத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இதேவேளை, அண்மையில் அவசர கூட்டம் ஒன்றுக்கு மேற்படி பகுதி பூசகர்கள் அழைக்கப்பட்டதும், யோகராஜன் எம்.பி. யின் தலையீட்டால் அது ரத்துச் செய்யப்பட்டதும் தெரிந்ததே. (க-உ)

## சனீஸ்வரன் தோத்திரம்

காப்பு

தேவரென் டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை-மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதை புகலக்
காரணிந்த யானை முகன் காப்பு.

வேலவனை வேங்கை மரம் ஆக்கி வைத்தாய்
விறகு கட்டிச் சொக்கர்தமை விற்க வைத்தாய்
மாலினியை யுரலோடு கட்டுவித்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்
காலனைமார்க் கண்டனுக்காக அரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே
சாலவுனை யான்றொழுதேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

இன்று புரட்டாதி மாத இரண்டாவது சனிக்கிழமையையொட்டி இத்தோத்திரம் பிரசுரமாகின்றது.

## வடபகுதி யுத்தமுனையில் புலிகளின் தலைவர்கள்?

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் வடபகுதிப் போர் முனைக்குச் சென்றிருப்பதால் தடுத்துவைக்கப்படும் படையினரின் உறவினர்கள், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு இப்போதைக்குஅனுமதிக்கப்படமாட்டார்கள் என புலிகள் தரப்பினர் தமிழ்நெற் மூலம் அறிவித்துள்ளனர்.


புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் படையினர் மற்றும் சிவிலியன்களைப் பார்வையிடுவதற்கென அவர்களுடைய உறவினர்கள் வன்னி சென்று திரும்ப புலிகள் இயக்கத்தினரிடம் தமிழ்நெற் மூலம் அனுமதி கோரியிருந்தனர்.

இந்தக்கோரிக்கையே மறுக்கப்பட்டுள்ளதாக காணாமல் போன படையினரின் உறவினர் சங்கத்தலைவர் ஈ.பி நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் இருந்து தமது தலைவர்கள் திரும்பியதும் திட்டவட்டமான முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் தமிழ்நெற் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-உ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## 27ஆவது ஒலிம்பிக் போட்டி



## 79 பதக்கங்களைப் பெற்று அமெரிக்கா முன்னணியில்

அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒலிம்பிக் போட்டியின் 14 ஆவது நாளான நேற்றுவரை அமெரிக்கா 33 தங்கம், 19 வெள்ளி, 27வெண்கலமென 79 பதக்கங்களைப்பெற்றுத் தொடர்ந்தும் முன்னணியிலுள்ளது

சீனா 26 தங்கம், 15 வெள்ளி, 15 வெண்கலப் பதக்கங்களையும், ரஷ்யா 20 தங்கம், 19 வெள்ளி, 22 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முறையே 2ஆம், 3ஆம்இடங்களைவகிக்கின்றன

இதேவேளை அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ருமேனியா, பிரித்தானியா மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகள் அடுத்தடுத்த நிலைகளைவகிக்கின்றன. (ந - 4)

## ஒலிம்பிக் வீராங்கனை சுசந்திகாவுக்கு ஜனாதிபதியின் புலமைப்பரிசில்

இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்கவிற்கு ஜனாதிபதி குமாரதுங்க புலமைப் பரிசிலினை அறிவித்துள்ளார்.

சுசந்திகா தனது திறமையினை மேலும் வளர்த்துக் கொள்ளவும், விரும்பிய நாட்டில் பயிற்சி பெறவும் போக்குவரத்து, தங்குமிடவசதி ஆகியவற்றிற்கான சகல செலவுகளையும் உள்ளடக்கியதாக இப் புலமைப் பரிசில்இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கொழும்பில் சுசந்திகாவின் பெயரில் ",நம்பிக்கைநிதியம்'' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

### வல்லை ...

நேர்ந்தது.

ட்ரக்' வண்டியில்கொண்டு செல்லப் பட்ட இராணுவ தளபாடங்கள் மீட்கப்பட்ட போதும் ட்ரக் வண்டி இன்னமும் மீட்கப்படாத நிலையில் கடலில் மூழ்கியுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. (வ)

### தபால் மூலம்...

தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் 1785 பேரும் மன்னாரில் 795 பேரும் முல்லைத்தீவில் 121 பேரும் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்று இருந்தனர் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளினதும், சுயேட்சைக் குழுவினதும் பிரதி நிதிகள் தபால் மூல வாக்களிப்பின் போது பிரசன்னமாகி இருந்தனர். (வ)

### ஒக்ரோபர்...

அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கையானது தேர்தலை மையமாகக்கொண்டு நடத்தப்படுவதால் சிறிய வெற்றியைப் பெரிது படுத்திக் காண்பிக்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் ஜெனரல் மேத்தா குறிப்பிட்டுள்ளார்.

காரைநகர் ப.நோ.கூ சங்கம்

காரைநகர்

அறிவித்தல்

கணக்காய்வு நிதியாண்டு
01-09-1997 — 31-08-1998
01-09-1998 — 31-08-1999

மேற்படி சங்கத்தின் குறிப்பிட்ட இரு நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதனால் சங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் வாடிக்கையாளர்கள் கிராமிய வங்கியுடன் தொடர்புடையவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் வருமதி செல்மதி மீதிகளை 20-10-2000க்கு முன்பதாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-தலைவர்

பணிமனை,
ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர். (சி-836)

# சுதந்திரமான தேர்தலுக்கு சகல கட்சி தலைவர்களும் ஆதரவுதரவேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்பட வேண்டும் இதனை மேற்கொள்ள சகல விதமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நாட்டின் தலைவர் என்ற வகையில் நான் தயார்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை தொலைக்காட்சியில் மக்களுக்காற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சட்டத்தினாலோ அல்லது என்னால் மாத்திரமோ சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவது முடியாத காரியமாகும் இதற்கு சகல அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

### தேர்தலுக்கு...

அரசியல் வாதிகள் தமது செல்வாக்கைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ந)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு
வெளிவாரிப்
பரீட்சைகள்
வணிக முதல் தேர்வு
1999

மேற்படி பரீட்சை 07-10-2000 (சனிக் கிழமை) முதல் ஆரம்பமாகின்றது. இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களுக்குரிய அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் வெளிவாரி பரீட்சைகள் அலகில் அக்டோபர் 2ம் திகதி (திங்கட்கிழமை) முதல் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
28-09-2000
(கி/834)

இத்தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் வன்முறைகளில் ஈடுபட்டால் அவர்கள் மீது ஒழுக்காற்ற நடவடிக்கைகளைமேற்கொள்ளப்படும்.

தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் அவர்களுக்கு எவ்வித பதவிகளும் வழங்கப்பட மாட்டாது என்று உறுதியளித்துள்ளார். [வ-2]

### தென்மராட்சி...

கின்றன.

இந்த யுத்தத்தையடுத்து அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்புக் கருதி தென்மராட்சியில் இருந்து வடமராட்சிப் பகுதிக்குச் செல்லுமாறு விடுதலைப் புலிகள் தமது உத்தியோக பூர்வ வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

புலிகளின் இவ் அறிவிப்பைத் தொடர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர முனைந்த போதும் அங்கு நிலை கொண்டுள்ளவர்கள் அனுமதி வழங்காமையினால் மக்கள் பெரும் யுத்த அபாயத்தை எதிர்நோக்கியவர்களாக உள்ளார்கள்.

கிளாலி, எழுதுமட்டுவாள் ஆகிய பகுதிகளை அண்டியுள்ள பிரதேசங்களில் மிக நெருக்கமாக யுத்தம் நடைபெற்று வருவதனால் இராணுவத்தினருக்கு துணையாக பல்குழல் பீரங்கிகளையோ ஆட்லறி எறிகணைகளையோ துல்லியமான முறையில் பாவிக்க முடியாத முறையில் தாக்குதல் சம்பவங்கள் உக்கிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரமடைந்து வரும் மோதலினால் தென்மராட்சி பகுதி எந்நேரமும் அதிர்ந்த வண்ணம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இப்பகுதிகளில் எந்நேரத்திலும்மோதல் அதி உச்சமடையலாமென அஞ்சப்படுகிறது (வ)

### தபால்...

மாஅதிபர் ஏ.எஸ். அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் தேர்தல் வன்முறைகள் நடைபெறலாம் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களுக்கு விஷேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதோடு அந்தப் பகுதிகளில் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் தபால் ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தர் பாதுகாப்பாகச் செல்ல அனுமதி அளிக்கப்படவுள்ளது.

தபால் ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும்போது அவர்களிடமிருந்து அவற்றை அபகரிப்பதற்கு சில அரசியல் வாதிகள் திட்டமிட்டிருப்பதை அடுத்தே இப்பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. [ந-4]

## சங்கிலியன்' படை வேண்டுகோள்

தமிழ்க்குழுக்களுடனோ, அரசியல் கட்சிகளுடனோ சேர்ந்து திரிவதை, நட்புறவு கொள்வதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென சங்கிலியன்படை கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் சங்கிலியன்படை வடமராட்சி என்ற தலையகத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையிலேயே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்குழுக்கள் மீது தாம் எந்த வேளையிலும் தாக்குதலை நடத்தவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### புலிகள்..-

- மாயவன் (சண்முகநாதன் கணேசலிங்கம்) கிளிநொச்சி
- அறிவுமணி (துரைராசா துளசிகாந்தன்) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். [ந-5]

### 5ஆம் தரம்...

இப் பரீட்சைக்கு தமிழ் மொழி மூலம் 47 ஆயிரத்து 510 மாணவர்களும் சிங்கள மொழி மூலம் 2 இலட்சத்து 863 மாணவர்களும் தோற்றியுள்ளனர்.

தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 4 ஆயிரத்து 308 மாணவர்கள் புலமைப்பரிசில் பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

தமிழ் மாணவர்கள் பெற்ற அதி கூடிய புள்ளி 188 ஆகும். மூன்று மாணவர்கள் இப் புள்ளியைப் பெற்றுள்ளனர். இவர்களில் இரு மாணவர்கள் கொழும்பு இந்துக்கல்லூரியிலும் மற்றைய மாணவன் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்திலும்கல்வி கற்கின்ற மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 195 புள்ளியை உயர் புள்ளியாகப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-2)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்

வடக்குக் கிழக்கு எக்காலத்திலும் பிரிக்கப்படாத
ஈழ மாநிலப் பிரதேசத்தில் எமக்கென
விசேட அதிகாரங்கள் கொண்ட
மாநில சுயாட்சியே ஈ.பி.டி.பி யின் இலக்கு!
உங்கள் வாக்கு வீணைச் சின்னத்திற்கே!



(ஈ. பி. டி. பி)

(இ/736)

யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகக் காணாமல் போனவர்களினது பிரச்சினைக்குத் தீர்வு காண, காணாமற் போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம், ஈ. பி. டி. பியின் ஏற்பாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.